Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 61 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 29ஆம் திகதி புதன்கிழமை
(14.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 17 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகள் ஐவரின் உடல்நிலை மோசம்

02 பக்கம்

## மின்சார வாகன கொள்வனவுக்கு துரித இலக்கம்

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மின்சார வாகன இறக்குமதிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் துரித தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு முறையான வகையில் பணம் அனுப்பும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மின்சார வாகனங்களைப் பெற்றுக்கொள்ள வசதியளிக்கும்... 02 பக்கம்

## செப். 19 விசேட அரச விடுமுறை

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு இடம்பெறவுள்ள எதிர்வரும் செப்டெம்பர் 19ஆம் திகதியை அரசாங்க விசேட விடுமுறை தினமாக பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் தேசிய துக்க நாளாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தடையாக இருக்கக் கூடாதென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆசிய கிண்ணங்களை சுவீகரித்த இலங்கை வலைப்பந்தாட்ட அணியினரும் கிரிக்கெட் அணியினரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு விசேட ஊர்தியில் ஊர்வலமாக நேற்று அழைத்துவரப்பட்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே, கிரிஷான் காரியவசம்)

## பொருள் தட்டுப்பாடு; 10 ஆயிரம் உணவகங்கள் மூடப்பட்டன!

நாட்டில் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக 10 ஆயிரம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் சுமார் 30 ஆயிரம் உணவகங்கள் இயங்குவதாகவும் பொருட்களின் தட்டுப்பாடு நீடிக்கும் பட்சத்தில் மேலும் பல உணவகங்கள் மூடப்படலாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மா, இறைச்சி, மீன், முட்டை ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கு உணவக உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். மேலும், பொருள் பற்றாக்குறை காரணமாக அரச நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் இயங்கிவரும் சிற்றுண்டிச் சாலைகள் பல மூடப்பட்டுள்ளதாக அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 02 பக்கம்

# இலங்கை மீது வலுவான தீர்மானம்!

### ஐ.நா. அங்கத்துவ நாடுகளிடம் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூட்டாக கோரிக்கை



நமது விசேட செய்தியாளர்

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக, குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் தற்போதைய சாசனத்தை வலுப்படுத்தும் வகையில் இலங்கைமீது வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பு நாடுகளிடம் மனித உரிமை அமைப்புகள் நேற்று கோரிக்கை விடுத்துள்ளன.

கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்துவதை நிறுத்துவது, துஷ்பிரயோகங்களுக்கு தீர்வுகாணுதல் உள்ளிட்ட நோக்கங்க ளுக்காக இந்தத் தீர்மானம் அவசியமானதென வலியுறுத் தப்பட்டுள்ளது. 02 பக்கம்

## போராட்டக்காரர்கள் மீது அரசின் அடக்குமுறை

### உலக நாடுகள் கடும் எதிர்ப்பு

இலங்கையின் ஆளும் தரப்பு அரசியல் தலைவர்கள் அதிகாரத்தை தக்க வைக்க பொதுமக்கள்மீது பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட கொடூரமான அடக்குமுறைகளை பயன்படுத்துவது குறித்து சர்வதேச நாடுகள் அதிர்ச்சியும், எதிர்ப்பும் வெளியிட்டன. 02 பக்கம்

## சீனாவிடம் கடன் வாங்கி பரிதவிக்கும் ஏழை நாடுகள்



02 பக்கம்

## ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் அவசியம்

### இந்தியா நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறார் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்



02 பக்கம்

## ரயில் முன்பதிவு 30 நாட்களுக்கு நீடிப்பு



ரயில் இருக்கை முன்பதிவு காலத்தை 14 நாட்களில் இருந்து 30 நாட்களாக ரயில்வே திணைக்களம் நீடித்துள்ளது.

அதன்படி, பயணிகள் ரயில் இருக்கைகளை 30 நாட்களுக்கு முன்னதாக முன்பதிவு செய்ய முடியும்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் பயணிகளுக்கு தரமான சேவையை வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உள்ளகப் பொறிமுறையே அரசாங்கத்தின் நிலைப்பாடு



### ஜெனீவா குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசு திட்டவட்டம்

அரசியலமைப்புக்கு அமைவாக நாட்டுக்குப் பொருத்தமான உள்ளகப் பொறிமுறையின் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என பதில் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்... 02 பக்கம்

## உணவுப் பாதுகாப்பின்மையால் 63 இலட்சம் பேர் கடும் பாதிப்பு

### எதிர்காலத்தில் நிலைமை மோசமடையுமென ஐ.நா. அமைப்புகள் எச்சரிக்கை

நமது விசேட செய்தியாளர்

இலங்கையில் 63 இலட்சம் மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பும் உலக உணவுத் திட்டமும் கூட்டாக அறிவித்துள்ளதுடன், உதவிகள் வழங்கப் படாதவிடத்து நிலைமை மேலும் மோசமடையுமென எச்சரித்துள்ளன.

உலக உணவுத்திட்டத்தினால் ஏற்கனவே இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், மீண்டும் இவ்விரு அமைப்புகளும் இணைந்து நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

நாட்டில் 60 வீதத்துக்கும் அதிகமான மக்கள் குறைவாக, மலிவான, ஊட்டச்சத்து குறைந்த உணவை உட்கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு பருவங்களில் விவசாய அறுவடைகள் 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளமையும் அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக உணவு வகைகளின் இறக்குமதி... 02 பக்கம்

## ஐ.எம்.எவ். அமைப்புடன் அரசுக்கு மறைமுக உடன்பாடுகளா?

### மறுக்கிறார் பதில் அமைச்சரவை பேச்சாளர்

சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வித மான மறைமுக உடன்பாடுகளும் செய்துகொள்ளப்படவில்லையென பதில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல்... 02 பக்கம்



உஷ்

விரைவில் நியமிக்கப்படவுள்ள அமைச்சரவையில் வஜிர அபேவர்தன, துமிந்த திசாநாயக்க, விமலவீர திசாநாயக்க, அதாவுல்லாஹ், ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பதில்லையென நாமல் ராஜபக்ஷ முடிவு செய்துள்ளாராம். இவர்களைத்தவிர அரசியல் கட்சிகள் இரண்டின் தலைவர்கள் இருவர் அமைச்சுப்பதவியை ஏற்கும் வாய்ப்பிருக்கிறதென தகவல்.

## இராஜாங்க அமைச்சுகளுக்கு பிரத்தியேக ஒதுக்கீடு கிடையாது

இராஜாங்க அமைச்சுகளுக்கு பிரத்தியேகமான நிதி ஒதுக்கீடு கிடையாதெனவும் செலவுகளை குறைப்பதற்காகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பதில் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 02 பக்கம்

## உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சட்டமா அதிபரை சந்தித்து கோரிக்கை

மெகசின் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக தமது விடுதலையை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து வரும் 13 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சட்டமா அதிபர் சஞ்ஜெய் இராஜரத்னத்துடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

பொருளாதார குற்றங்கள் செய்யேல்லையெண்டு இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் சொன்னது, கவர்ச்சியா நடிக்கேல்லையெண்டு ஷகீலா சொன்ன மாதிரி இருக்குது...



## மின்சார வாகன...

வகையில் புதியத் திட்டம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 0773039034, 0112 368175 ஆகிய இலக்கங்களின் ஊடாக பிரபாத காகொடவை அல்லது 0112582447 என்ற இலக்கத்தின் ஊடாக சிரேஷ்ட உதவி செயலாளரை தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சீனாவிடம் கடன் வாங்கி...

உலக வங்கி அறிக்கையிலுள்ள தகவல்படி உலகிலுள்ள 97 நாடுகள் சீனாவிடம் கடன் பெற்றுள்ளன. இலங்கை, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவுகள் சீனாவின் மிகப்பெரிய கடனாளிகளாக உள்ளன. சீனாவிடமிருந்து அதிகபட்சமாக பாகிஸ்தான் ரூ.5.5 இலட்சம் கோடி கடன் பெற்றுள்ளது.

சீனா சில உலக நாடுகளுக்கு துறைமுகம், ரயில் மற்றும் வீதி உட்கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு கடன் வழங்கியது. சீனா கடன் அளித்த நாடுகள் பெரும்பாலும் குறைந்த வருவாய் கொண்ட ஆபிரிக்க நாடுகளாக உள்ளன. இது தவிர மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பகுதிகளில் உள்ள நாடுகளும் சீனாவின் கடன் வலையில் சிக்கியுள்ளன.

உலகின் குறைந்த வருவாய் கொண்ட நாடுகள் 2022இல் தங்கள் கடனில் 37 சதவீதத்தை சீனாவிற்கு செலுத்த வேண்டியுள்ளது. அதே சமயம் இவை உலகின் மற்ற நாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் வெறும் 24 சதவீதமாக மட்டுமே உள்ளது. சீனாவிடம் அதிகம் கடன் வாங்கியுள்ள நாடுகளில் முதலிடம் நமது அண்டை நாடான பாகிஸ்தானையே சேரும். சுமார் ரூ.5.5 இலட்சம் கோடி கடன் பெற்றுள்ளது.

அடுத்தபடியாக அங்கோலா நாடு ரூ.2.7 இலட்சம் கோடியும், எத்தியோப்பியா ரூ.59 ஆயிரம் கோடியும், கென்யா ரூ.55 ஆயிரம் கோடியும், இலங்கை ரூ.50 ஆயிரம் கோடியும் சீனாவுக்கு கடன்பட்டுள்ளன. சீனாவிடம் இலங்கை பெற்றுள்ள கடன் தனது தேசிய வருவாயில் 9 வீதம் ஆகும். இதனால் இலங்கை ஏப்ரல் மாதம் வங்குரோத்து நிலையை அறிவித்தது. கடனை திருப்பிச் செலுத்த முடியாது என்றது.

அதேபோல் நமது அண்டை நாடான மாலைதீவும் சீனாவிடம் கடன் வாங்கியுள்ளது. அதன் கடன் அளவு மொத்த தேசிய வருவாயில் 31 சதவீதமாக உள்ளது. 2020ஆம் ஆண்டின் இறுதியில் மாலைதீவின் மொத்தக் கடன் சுமார் ரூ.4,400 கோடி. அதில் சரி பாதி சீனாவிடம் பெற்ற கடன். இது 2022 முதல் காலாண்டில் 5 ஆயிரம் கோடி ரூபாவாக வளர்ந்துள்ளது.

ஏழ்மையான நாடுகளுக்கு கடன் வழங்கும் சீனாவின் நடைமுறை விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அந்த நாடுகள் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் பீஜிங்கின் அழுத்தத்தால் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர். சீனா இந்த விமர்சனத்தை நிராகரிக்கிறது. தனது நாட்டின் நன்மதிப்பைக் கெடுக்க சில நாடுகள் இத்தகைய குற்றச்சாட்டை வைப்பதாக கூறுகிறது.

## உணவுத் தவிர்ப்பில்...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 13 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 6ஆம் திகதியிலிருந்து கொழும்பு மெகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இவர்களில் 5 பேரின் நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்மைப் பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2019ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## பொருள் தட்டுப்பாடு:...

நாடு முழுவதும் அரச நிறுவனங்களில் மூவாயிரம் சிற்றுண்டிச்சாலைகளும் பாடசாலைகளில் நான்காயிரத்து 600 சிற்றுண்டிச்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவற்றை கொண்டுநடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், திருமண நிகழ்வு, மரணச்சடங்கு மற்றும் விசேட தேவைக்கான சமையல் பணிகளுக்கு பெருந்தொகைப் பணம் செலவாவதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் அந்தத் தொழிலை முன்னெடுப்பதில்லை.

மேலும், கேக், வட்டிலப்பம் உள்ளிட்ட பொருட்களை வீடுகளில் தயாரித்து விற்பனை செய்துவந்த சுமார் 60 ஆயிரம் பேர் தொழிலை இழந்துள்ளனர்.

## ஐ.எம்.எவ். அமைப்புடன்...

திணைக்களத்தில் நேற்று (13) நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையானது அமைச்சரவைக்கும் எதிர்க்கட்சி மற்றும் கோபா, கோப் ஆகிய குழுக்களின் தலைவர்களுக்கும் உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் மறைமுக உடன்பாடுகள் எதுவும் இல்லை.

## உள்ளகப் பொறிமுறையே...

ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (13) நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கருத்து வெளியிடுகையில், மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றமை வழமையாகிவிட்டது. அரசாங்கம் என்ற வகையில் எமது நிலைப்பாட்டை சர்வதேசத்தின் மத்தியில் எடுத்துரைத்துள்ளோம்.

தீவரவாதத்தை ஒழிப்பதற்கான மனிதாபிமான நடவடிக்கை தொடர்பில் மாற்றுக்கருத்துடையோர், சில அமைப்புகள் மற்றும் சில அரச சார்பற்ற நிறுவனங்களால் தவறான கருத்துகள் உலகத்துக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு கிரமமாக பதிலளிக்க எங்களால் இயலுமாக இருந்தது - என்றார்.

## இராஜாங்க அமைச்சுகளுக்கு...

பிரதான அமைச்சுகளுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டைக்கொண்டே இராஜாங்க அமைச்சுகள் இயங்க வேண்டும். இராஜாங்க அமைச்சுகளுக்கு தனியான நிதி ஒதுக்கீடு கிடையாது.

நிதி ஒதுக்கீடு இல்லாமை காரணமாக இராஜாங்க அமைச்சர்களுக்கு பணிகளில் ஈடுபட முடியாது எனக் கூறப்படுவதில் உண்மையில்லை. ஏராளமான பொறுப்புகள் இருக்கின்றதாலேயே இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார்.




## இலங்கை மீது...

சர்வதேச மன்னிப்புச் சபை, போரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணையம் ஆகிய நான்கு அமைப்புகள் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இலங்கை மிகக் கடுமையான பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமை நெருக்கடியை முகங்கொடுத்து வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைதியான முறையில் ஒன்றுகூடுவதை நசுக்குவதற்கு தவறான பாதுகாப்பு நடவடிக்கைகளை பயன்படுத்தியுள்ளதாக அவ்வமைப்புகளால் பேரவை நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் இழைக்கப்பட்டுள்ள குற்றங்களின் ஆதாரங்களை சேகரித்து 2021, மார்ச் தீர்மானத்தை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்கும் வகையில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென பேரவையின் உறுப்பு நாடுகளை வலியுறுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் புதிய தீர்மானமானது, இலங்கையில் மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் நெருக்கடியுடன் தொடர்புடைய உரிமை மீறல்களுக்கு தீர்வுகாணும் நோக்கில் அமைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் கடந்த காலங்களில் பாதிப்புக் குள்ளான பலர் பல ஆண்டுகளாக நீதியைக் கோரி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது பொறுப்புக் கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கென அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை, மேற்படி நான்கு மனித உரிமை அமைப்புகளும் இணைந்து புதிய தீர்மானத்தை கொண்டுவரும் நோக்கில் சில விடயதானங்களை முன்வைத்துள்ளன. பழிவாங்கல், கைதுக்கு அஞ்சாமல் சுதந்திரமாகவும் அமைதியாகவும் போராட்டம் நடத்துதல் மற்றும் கருத்துகளை வெளிப்படுத்தும் மக்களின் உரிமைகளை மதித்தல், அண்மைய போராட்டங்களில் பங்கேற்ற, ஆதரவளித்ததாக நம்பப்படும் நபர்களை துன்புறுத்துதல், மிரட்டுதல், தன்னிச்சையான கைதுகளை நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல், அதன் பயன்பாட்டுக்கு உடனடித் தடை விதித்தல், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படாத குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியிருப்போரை விடுதலை செய்தல் ஆகியவற்றை முக்கிய குறிப்புகளாக அவ்வமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## போராட்டக்காரர்கள் மீது...

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின் 51ஆவது கூட்டத்தொடரில் பலம் மிக்க நாடுகள் பலவும் இலங்கை நிலைவரம் குறித்து அதிருப்தி தெரிவித்தன. போராட்டம் தொடர்பான வன்முறைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. எதிர்ப்பாளர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட வன்முறை குறித்து இங்கிலாந்து அதிர்ச்சியை வெளியிட்டது.

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற சக்தியைப் பயன்படுத்துவதை ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்தது சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் இணங்கும் வகையில் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) மறுசீரமைக்குமாறு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தன. ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் அமெரிக்க தூதுக்குழு சார்பில் தூதுவர் மைக்கேல் டெய்லர் பேசுகையில், “சட்டத்தின் ஆட்சி, நீதிக்கான சம உரிமை, சுதந்திரமான நிறுவனங்கள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை ஜனநாயக அமைப்புகளின் தூண்கள்” என்று கூறினார்.

“மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள், அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுக்கான உரிமைகள் உள்ளிட்டவற்றை மதிக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம். சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதிக்கு சமமான அணுகல் ஆகியவற்றிற்கு இணங்க எதிர்ப்பு தொடர்பான வன்முறைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று நாங்கள் அழைக்கிறோம்” என்று அவர் கூறினார். “நியாயமான விசாரணை உத்தரவாதங்கள் மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டப் பாதுகாப்புகளைப் பாதுகாக்க, பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், சர்வதேச மனித உரிமைகள், கடமைகள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் இணங்குவது அவசியம். மேம்பட்ட மனித உரிமைகளை நோக்கிய ஒரு முக்கிய படியாக இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் தண்டனை மற்றும் ஊழலுக்குத் தீர்வு காண்பதும் முக்கியமானது. இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம்” என்று அமெரிக்க தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் சீர்திருத்த முயற்சிகளுக்கு எவ்வாறு சிறந்த முறையில் ஆதரவளிக்க முடியும் மற்றும் சிறுபான்மைக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட அனைவரின் பிரதிநிதித்துவம், உள்ளடக்கம் மற்றும் தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடியவர்கள் என்பதை உறுதிப்படுத்துவது எப்படி என்றும் தூதுக்குழு மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் கேட்டது.

இதற்கிடையில், கவுன்சிலிலுள்ள இங்கிலாந்து பிரதிநிதிகள், “எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்ப்பாளர்களுக்கு எதிராக வன்முறை பயன்படுத்தப்பட்டதில் நாங்கள் திகைக்கிறோம். பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம், மேலும் சட்டத்தை சீர்திருத்துவதற்கு தொடர்ந்து அழைப்பு விடுக்கிறோம்” என்று தெரிவித்தனர்.

“மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தில் கோரியபடி பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்திற்கு நாங்கள் வருந்துகிறோம். 2020 இல் வாக்குறுதியளிக்கப்பட்ட உள்நாட்டு நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறை வெளிவரவில்லை. இந்தக் காரணங்களுக்காக OHCHRஇன் ஆதாரங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் பணி தொடர வேண்டும்” என்று ஐ.நா. பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

அரசியல் உள்வாங்கல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் உட்பட அனைத்து மத மற்றும் இன குழுக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதில் இலங்கையின் சமீபத்திய உறுதிமொழிகளை இங்கிலாந்து வரவேற்றது. இதனுடன், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக் கத்திற்கான வாக்குறுதியளிக்கப்பட்ட அணுகு முறைகளுடன் இலங்கைக்கு தொடர்ந்து உரையாடவும் ஆதரவளிக்கவும் தயாராக இருப்பதாக இங்கிலாந்து தெரிவித்துள்ளது.

அமர்வில் பேசிய ஐரோப்பிய ஒன்றியம், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற பலாத்காரத்தைப் பயன்படுத்துவதைக் கண்டிப்பதோடு, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு முழுமையாக இணங்கும்வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இடைநிறுத்துமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கிறது. தண்டனையின்மை.

“ஐரோப்பிய ஒன்றியம், உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு நன்றி தெரிவிக்கிறது, அதை நாங்கள் வரவேற்கிறோம். இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

“ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையின் பல மாத எதிர்ப்பு மற்றும் சமீபத்திய அரசாங்க மாற்றத்தைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் சவால்களை அங்கீகரிக்கிறது, அதேசமயம் அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை நிலைநிறுத்துவதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, குறிப்பாக, இலங்கையிலுள்ள நபர்கள் உட்பட அனைத்து நபர்களின் கருத்து மற்றும் கருத்து சுதந்திரம். பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சூழ்நிலைகளில் குழுக்கள். அனைவரின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை திறம்பட மற்றும் சமமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கும் உயர்ஸ்தானிகருடன் முழுமையாக ஒத்துழைப்பதற்கும் ஊக்குவிக்கிறது. ஆட்சி, சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அதிகாரப்பகிர்வு மற்றும் மனித உரிமைகள் பற்றிய முழுமையான உள்ளடக்கிய உரையாடலை நோக்கிய இலங்கையின் முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து ஆதரவளிக்கும்.

## ஈழத் தமிழர்களுக்கு...

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**

ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத்தர இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் நேற்று (13) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை; இனியும் தாமதிக்காமல் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் இந்தியாவின் நிலை வரவேற்கத்தக்கது. ஆனால், போதுமானதல்ல.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய இந்தியத் தூதர், ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துதல், மாகாண அவைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல், நீண்டகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண அவைகளுக்கு உடனே தேர்தல் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், அளவிடக்கூடிய முன்னேற்றம் எதையும் இலங்கை அரசு எட்டவில்லை என்று குற்றஞ்சாட்டினார். ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் சிங்களர்கள் மட்டுமே ஆட்சிக்கு வர முடியும். இலங்கை ஆட்சியாளர்களின் மனதிலிருந்து சிங்கள பேரினவாத உணர்வையும், தமிழர்கள் வெறுப்பு மனநிலையையும் அகற்ற முடியாது என்ற சூழலில் இலங்கை இனச்சிக்கலுக்கு தனித்தமிழ் ஈழம் மட்டுமே தீர்வு என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது.

ஆனால், அதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான பயணம் மிக நீண்டது என்பதால், அதுவரை ஈழத்தில் வாழும் தமிழர்கள் கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வகை செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பெருங்கடமை இந்தியாவுக்கு உண்டு என்று பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இத்தகைய சூழலில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தியிருப்பது மனநிறைவை அளிக்கிறது. ஆனால், இந்த வலியுறுத்தல் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தை பெற்றுத் தந்து விடாது என்பதை இந்தியா உணர வேண்டும்.

சர்வதேச அவைகளிலும், இரு தரப்பு பேச்சுகளின்போதும், 13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று இந்தியா இதுவரை நூறு முறை வலியுறுத்தியிருக்கும். இப்போது 101ஆவது முறையாக வலியுறுத்துவதால் மட்டும் எந்த பயனும் ஏற்பட்டுவிடாது. மாறாக, இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து ஈழத்தமிழர்களுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தையாவது பெற்றுத்தர வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை, அதன் அடிப்படைத் தேவைகளுக்குக் கூட இந்தியாவைத் தான் நம்பியிருக்கிறது. இத்தகைய சூழலில், 13ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் அம்சங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில்தான் உதவிகளை வழங்க முடியும் என்று நிபந்தனை விதிப்பதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் - என அவர் தெரிவித்துள்ளார்.

## உண்ணாவிரதமிருக்கும்...

அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, 13 அரசியல் கைதிகள் 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் மீது இதுவரையில் எவ்விதமான வழக்குகளும் தொடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் அவர்களின் விடுதலை தொடர்பில் விசேட கவனத்தை உடன் எடுக்க வேண்டும்.

ஆகக்குறைந்தது அவர்கள் மீதான வழக்குகள் தொடுக்கப்பட்டாலே அவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அவர்கள் எவ்விதமான குற்றங்களும் செய்யாத நிலையில் சந்தேகத்தின்பேரிலேயே கைதுசெய்யப்பட்டு இவ்வளவு நாட்களும் நீதிமன்றில் முற்படுத்தப்படாது உள்ளனர் என்று எடுத்துரைக்கப்பட்டது. இதன்போது சட்ட மா அதிபர் தரப்பில், கடந்த வழக்கு தவணைக்குப் பின்னர் 13 பேரில் 11பேர் தொடர்பில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஒருவரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா கவும் தெரிவித்ததோடு, இந்த விடயங்கள் அரசியல் கைதிகளுக்கு தெரியாது இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டது.

எனினும். 13 அரசியல் கைதிகள் கடந்த 04 வருடங்களாக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு பிணை அனுமதிகளை வழங்க வேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, அந்தந்த சட்டத்தரணிகள் ஊடாக இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது சட்ட மா அதிபர் திணைக்களம் அனுமதிக்க வேண்டும் என்றும் கோரினோம். எனினும், அதற்கு உரிய உறுதிப்பாடுகள் எவையும் வழங்கப்படவில்லை.

இதனைவிடவும், ஏற்கனவே சிறையில் வாடிக்கொண்டிருக்கும் 33 அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

அத்துடன் 22 பேருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரியிருந்தோம். அதன்போது 33 பேரின் பிணை தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று சட்ட மா அதிபர் தரப்பில் தெரிவித்தாலும் உறுதிப்பாடுகளை வழங்கவில்லை. 22 பேரின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உணவுப் பாதுகாப்பின்மையால்...

கட்டுப்படுத்தப்பட்டமையும் இதற்கு பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு அவசர உதவிகள் தேவைப்படுவதாக இவ்விரு அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாகவும் மிகக் குறைவான விளைச்சல் பெற்றுக்கொண்டமையினாலும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதி சவால் மிக்கதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியானது உணவு, விவசாய உள்ளீடுகள், எரிபொருள், மருந்து ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2022ஆம் ஆண்டு அரிசி உற்பத்தி மூன்று மில்லியன் மெற்றிக் தொன் என கணிப்பிடப்பட்டுள்ளது. இது, 2017ஆம் ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டபோது கிடைத்த விளைச்சலை விட குறைவானதாகும்.

சோளத்தின் உற்பத்தி கடந்த ஐந்து ஆண்டு சராசரியை விட 40 வீதம் குறைவடைந்துள்ளது. காய்கறிகள், பழங்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னை, வாசனைத் திரவியங்களும் விளைச்சலில் குறைவடைந்துள்ளன.

2022ஆம் ஆண்டில் உணவுப் பணவீக்கமானது 94 சதவீதமாக உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விமலேந்திர ஷரன், நாட்டில் 30 வீதமான மக்கள் விவசாயத்தை நம்பியுள்ள நிலையில் உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேச விசாரணைகளே அவசியமாகும்

## அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு கண்டனம்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக கோரிவரும் எமக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமையானது கவலையளிப்பதாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.




ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் (12) கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு கண்டனத் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர்கள், தமக்கு சர்வதேச விசாரணையே அவசியமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர் நேற்று (13) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு இலங்கை தொடர்பான விடயத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக கோரிவரும் எமக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமையானது கவலையளிக்கிறது. இதேவேளை, இந்த கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணை தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்புகளாக நாம் இன்று 13 ஆண்டுகளாக போராடி எந்தத் தீர்வும் இல்லாது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஆரம்பித்த தொடர்ச்சியான போராட்டம் இன்று 2015ஆவது நாளாக தொடர்கிறது. இந்நிலையில், ஜெனீவாவில் நேற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்தானது எமது உணர்வுகளை புறந்தள்ளி அரசை பாதுகாப்பதாக அமைந்துள்ளதோடு குறித்த கருத்துக்கு கடும் கண்டனத்தையும் வெளியிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், நேற்று (13) கொழும்பிலுள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்றிருந்தார். அவர் இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டதுடன், தனது அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார்.

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் செயலமர்வு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் (School Based Teacher Development) பற்றிய விழிப்புணர்வூட்டல் செயலமர்வொன்று புத்தளம் பாத்திமா மகளிர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நேற்று (12) இடம்பெற்றது.





இந்தச் செயலமர்வில் வடமேல் மாகாண முன்னாள் பணிப்பாளர் செல்வி ஜெயந்திலா விசேட வளவாளராக கலந்துகொண்டார்.

இச்செயலமர்வில் வேப்பமடு முஸ்லிம் மகாவித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் பாத்திமா மகளிர் தேசிய பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

மேலும், விசேடமாக க.பொ.த. சாதாரண தரம், உயர்தர மாணவர்கள், அவர்களது பெற்றோர்களுக்கும் தனித்தனியாக வழிகாட்டல் விழிப்புணர்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புகையிரதத்தில் மோதி இருவர் உயிரிழப்பு

பலப்பிட்டிய மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பலப்பிட்டிய, வெனமுல்ல பகுதியில் கொழும்பு நோக்கி பயணித்த ரயிலுடன் வேன் மோதி இடம்பெற்ற விபத்தில் 63 வயதான வேனின் சாரதி உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, வவுனியா, தாண்டிக்குளத்தில் புகையிரதத்துடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று (13) இடம்பெற்றுள்ளது.

வவுனியா, ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 44 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர். சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, காலி, மக்குளுவ பகுதியில் ரஜரட்ட ரெஜின புகையிரதத்துடன் வேன் மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புகையிரதத்துடன் மோதிய வேன், மோட்டார்சைக்கிளொன்றுடனும் மோதியுள்ளது. இதன்போது, மோட்டார்சைக்கிள் ஓட்டுநர் காயமடைந்துள்ளதுடன், அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொரிய தொழில் வாய்ப்புக்கு என்.வி.கியூ சான்றிதழ் தேவையில்லை

## இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு

என்.வி.கியூ சான்றிதழ் என அழைக்கப்படும் தொழில்சார் தகைமை இன்றியும் கொரியாவில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும் - என இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொருத்துதல் மற்றும் அரைத்தல் போன்ற தொழில்வாய்ப்புகளுக்கு குறித்த சான்றிதழ் அவசியமில்லை.

மேலும் குறித்த தொழில்வாய்ப்புகளுக்காக ஆரம்பகட்ட வேதனமாக எட்டரை இலட்சம் ரூபா வேதனம் வழங்கப்படுகிறது.

கொரிய மொழியில் தேர்ச்சி இல்லாவிட்டாலும் குறித்த தொழில்களுக்காக விண்ணப்பிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொட்டகலை மேபீல்ட் சந்தியில் நபரொருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம்

## விசாரணைகளையடுத்து சந்தேக நபரொருவர் கைது

(க.கிஷாந்தன்)

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை மேபீல்ட் சந்தியில் வீதி ஓரத்திலிருந்து மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் ஒருவர் திம்புள்ள - பத்தனை பொலிஸாரால் நேற்று (13) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் (12) மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞன் வாகன விபத்தினால் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் (சீ.சீ.ரீ.வீ.) அந்த நபர் விபத்தில் சிக்குவது பதிவாகியிருந்தது.

பின்னர் விபத்தை ஏற்படுத்திய நபர்கள் தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுப்பட்டு வந்தனர்.

அதனையடுத்து, கொட்டகலை ரொசிட்டா பகுதியில் வைத்து இந்தச் சம்பவத்தின் தொடர்புடைய வேன் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சாரதி விபத்தை ஏற்படுத்திவிட்டு, மேற்படி இளைஞன் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததை அறிந்த சாரதி வேனுக்கு அடியிலிருந்து அவரை இழுத்து, வீதி ஓரத்தில் போட்டுவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸாருக்கு குறித்த வாக்குமூலம் அளித்துள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மொரஹல, பலாங்கொடை, மெதகமமெத்த பகுதியைச் சேர்ந்த நதீர சம்பத் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் தலவாக்கலை பிரதேசத்திலுள்ள மீன் கடையொன்றில் பணிபுரிபவர் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞன், கல்லீரல் பாதிக்கப்பட்டு வயிற்றில் அதிக இரத்தோட்டம் ஏற்பட்டமை காரணமாக உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையை மேற்கொண்ட டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் நிபுணத்துவ சட்ட வைத்திய நிபுணர் இனோகா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த இளைஞன் அதிகளவான மதுபோதையில் இருந்துள்ளமை பிரேத பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட வேன் சாரதியை இன்று (14) ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யவுள்ளதாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

# சுகாதார மேம்பாட்டுக்கான பொருட்கள் வழங்கிவைப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி, வன்னி முந்தல் மீனவர் சங்கத்தினரால் கற்பிட்டி அல்-அக்ஷா தேசிய பாடசாலைக்கு சுகாதார மேம்பாட்டுக்கான பொருட்கள் நேற்று (13) வழங்கப்பட்டன.



வன்னி முந்தல் மீனவர் சங்கத்தின் உறுப்பினர்களான முஹம்மட் பஹ்மி, எம்.சிராஜ், முஹம்மது லுக்மான் ஆகியோர் மேற்படி பொருட்களை கற்பிட்டி அல்-அக்ஷா தேசிய பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சாரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் முஹம்மட் பசார், பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டுக் குழுவின் செயலாளர் முஹம்மட் மஹீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, முதல் கட்டமாக ஆரம்பப் பிரிவு வகுப்பறைகளை சுத்தமாக வைத்திருப்பதற்காக ஒவ்வொரு வகுப்பறைகளுக்குமான குப்பைக் கூடைகள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் ஒருவர் வாழ மாதம் 13,137 ரூபா போதும்

## குடித்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புதிய அறிக்கை

இந்நாட்டில் ஒருவர் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து ஒரு மாதம் வாழ்வதற்கு குறைந்தபட்சம் 13,137 ரூபா தேவையென அடையாளம் காணப்பட்டுள்ளது.

குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

முந்தைய மாதத்தில் இதே எண்ணிக்கை 12,444 ரூபாவாகக் காட்டப்பட்டது, இம்முறை வளர்ச்சி 5.57 வீதமாக உள்ளது.

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றின் அடிப்படைத் தேவைகளை ஒரு மாதத்தில் பூர்த்தி செய்யத் தேவையான தொகை 52,552 ரூபா எனவும் கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை 56,676 ரூபா தேவை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# வீதிகளில் குப்பைகளை கொட்டுவதால் சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு

## இம்புல்பிட்டிய மக்கள் கவலை

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை – நாவலப்பிட்டிய பிரதான வீதியில் இம்புல்பிட்டிய பிரதேசத்தில் சிலர் குப்பைகளை கொட்டுவதால் பல்வேறு வகையில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இம்புல்பிட்டிய பகுதியை அண்மித்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



வீடுகள் மற்றும் கடைகளிலிருந்து வெளியேற்றப்படும் பல்வேறு கழிவுகளை இரவுநேரங்களில் சிலர் சாலையை சுற்றியுள்ள பகுதிகளில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனை பன்றி, நாய், கீரி, காகம் போன்ற விலங்குகள் வெவ்வேறு இடங்களுக்கு அதனை இழுத்துச் சென்று வெவ்வேறு இடங்களில் போடுகின்றமையால் நோய்கள் பரவுவதற்கான சூழல் நிலவுவதாக பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

அத்துடன், வீதியின் இருபுறமும் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் பல்வேறு கழிவுகள் அடங்கிய குப்பை பொதிகள் வீதியில் போடப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது. நாவலப்பிட்டிய நகரசபையால் பல நாட்களாக வீதியை சூழவுள்ள பகுதிகளில் கொண்டுவரப்பட்ட குப்பைகளை அகற்றி இடங்களை சுத்தப்படுத்திய போதிலும், அதன் பின்னரும் மீண்டும் அதே இடங்களுக்கு சிலர் அதிகளவில் கழிவுகளை கொண்டுவந்து கொட்டுவதாக நகரசபையினர் தெரிவிக்கின்றனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
சிறு விளம்பரம்
ஜோதிடம்
உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி. உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath suwamiji

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 14ஆம் திகதி, புதன்கிழமை

# இந்தியாவின் அறிவிப்பும் கொழும்பின் நிலைமையும்

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கவும், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவும் இந்தியா மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான அதன் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே பேரவையின் முதல் நாளில் அதாவது நேற்று முன்தினம் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

"இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த இந்தியாவின் நிலையான பார்வையானது, இலங்கைத் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் வகையில், ஐக்கிய இலங்கையின் கட்டமைப்பிற்குள் அரசியல் தீர்வாகும்" என்று பாண்டே கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியானது கடனினால் இயங்கும் பொருளாதாரத்தின் வரம்புகளையும், அது வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் நிரூபித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

"இலங்கையின் பிரஜைகளின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதும், அவர்களின் வலுவூட்டலை நோக்கிச் செயற்படுவதும் இலங்கையின் சிறந்த நலன்களாகும், இதற்கு அடிமட்ட மட்டத்திற்கு அதிகாரப் பகிர்வு சிறந்ததாகும்" என அவர் தெரிவித்தார்.

முன்கூட்டியே தேர்தல்களை நடத்துவதன் மூலம் மாகாண சபைகளை செயற்படுத்துவதன் மூலம் இலங்கையின் அனைத்து பிரஜைகளும் வளமான எதிர்காலத்திற்கான தமது அபிலாஷைகளை அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு ஆறு மாத கால அவகாசம் வழங்கவுள்ளதாகவும், அதற்குள் நாடாளுமன்றம் ஒரு முடிவைக் காணாவிட்டால், சர்வஜன வாக்கெடுப்பு வைத்து மக்கள் கருத்தைக் கேட்டறியவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் அறிவித்த ஓரிரு நாட்களுக்குள் இந்தியாவின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளதை நோக்க வேண்டும்.

கடந்த நல்லாட்சி காலத்தில் அப்போது புதிதாக உருவாகி, வேகமாக எழுச்சி பெற்று வந்த பொதுஜன பெரமுனவை - மொட்டுக் கட்சியை கண்டு அச்சப்பட்ட அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அச்சமயம் தெற்கில் நடத்தப்பட வேண்டிய இரண்டு மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்ளப் பின்னடித்தார். மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை ஒருங்கு சீரமைக்கிறோம், அதை ஒரு வருடத்தில் முடிப்போம் என்று நாடாளுமன்றுக்கு உறுதி அளித்து, இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை அப்படியே இரத்தாக்கினார். இப்போது ஐந்து வருடங்கள் கழிந்தும் அந்தத் தேர்தல் சட்டங்களும் வரவில்லை, அதனால் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவும் இல்லை. இப்போது தேர்தல் சீர்திருத்தம் வரப்போகிறது என்பதைக் காட்டி, மாகாண, உள்ளூராட்சி தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்யத் தயாராகியுள்ளார் ரணில்.

இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது இந்தியா. தமிழர்களுக்கு குறைந்தபட்ச தீர்வு அதில் இருப்பதாக இந்தியா நம்புகிறது. ஆனால், மாகாணசபை என்பது வெள்ளை யானை என்பது தமிழர்களுக்கு தெரியாததல்ல. மாகாணசபை முறைமை இருப்பது இலங்கை போன்ற நாடுகளுக்கு உகந்ததல்லவென சிங்கள பேரினவாதிகள் காலாகாலம் தெரிவித்து வருகின்றனர். கடந்த கோட்டாபயவின் ஆட்சியின்போதுகூட பிரபல பௌத்தபிக்குமார் சிலர், மாகாணசபை முறைமை இரத்துச் செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தனர். அதனை அனுமதிப்பதுபோல கோட்டாபயவும் அப்போது மௌனமாக இருந்தார்.

மாகாணசபை முறைமை என்பது ஈழத்தமிழர்களுக்கான இலேசான ஒரு அதிகாரப்பகிர்வு என்று சர்வதேசம் சமூகம் கருதுகிறது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் முத்தாய்ப்பான இது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இருந்தாலும், ஈழத்தமிழர்களுக்கு நன்மை பயக்காவிட்டாலும், மாகாணசபை முறைமை தீமையை தந்துவிடவில்லை. தமிழர் பிரச்சினை தீர்வுக்கான செயற்றிட்டத்தில் மாகாணசபை முறைமை தவிர்க்கமுடியாதது என்று இந்தியா கருதுகிறது. அதேசமயம் மாகாண சபை என்பது இந்தியாவின் குழந்தை. அதை பிரசவித்ததுபோன்று காப்பாற்றவேண்டிய தார்மீக கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கிறது. அதனால்தான் இலங்கை கேட்கிறதோ, இல்லையோ அவ்வப்போது தனது நிலைப்பாட்டை கூறிக்கொண்டேயிருக்கிறது இந்தியா.

கடந்தவருடம் இதே நிலைப்பாட்டை இந்தியா ஜெனீவாவில் அறிவித்தபோது இங்கே கோட்டாவின் ஆட்சி. இம்முறை அதே அறிவிப்பின்போது இங்கே இருப்பது ரணிலின் ஆட்சி. கோட்டாபயவை விட ரணில் ஜனநாயகமானவர் என்பதால் இந்தியாவின் வலியுறுத்தல்களை பரிசீலிப்பார் என்றெல்லாம் மனப்பால் குடிக்கக் கூடாது. இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை உள்ளகப் பொறிமுறை ஊடாகவே விசாரிக்கலாம், வெளியாரின் தலையீடு தேவையில்லை என்ற கோட்டா அரசின் அதே நிலைப்பாட்டை இம்முறை ரணிலும் ஜெனீவாவில் கூறியிருப்பதால் புதிய திருப்பங்கள் ஏதும் நடந்துவிடப்போவதில்லை.

மனித உரிமைகள் நிலைநாட்டலோ, தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குதலோ, அரசியலமைப்புத் திருத்தமோ, எதுவென்றாலும் ஜனாதிபதி ரணிலின் இப்போதைய ஆட்சி உடனடியாக எதையும் செய்துவிடும் நிலையில் இல்லை. பொருளாதார நெருக்கடி ஒருபுறம், அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமை இன்னொருபுறம் என்று தவித்துக்கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் அதையே காரணம் காட்டி பல விடயங்களை ஒத்திவைத்துவிடுவார்கள். அதிலும் இழுத்தடிப்பது ஒரு கலை என்றால் அதன் பிக்காஸோ ரணில் என்று கூறிவிடலாம்.

இந்தியாவின் இறுதியான அந்த ஜெனீவா கோரிக்கை எப்போதும்போல வரவேற்கப்படக் கூடியதுதான். ஆனால், அதனால் பெரிய மாற்றங்கள் ஒன்றும் கொழும்பில் ஏற்படப்போவதில்லை என்பதே உண்மை.

# தேசிய, சர்வதேச கண்டனத்துக்குள்ளாகும் இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறை

கடந்த ஜூலையில் உச்சக்கட்டத்தை அடைந்த மக்கள் போராட்ட இயக்கத்துக்கு எந்த அளவிலாவது தலைமைத்துவத்தை வழங்கியவர்களை வேட்டையாடும் நடவடிக்கைகள் நிலையாகத் தொடர்கின்றன. மிகவும் இறுதியாக கைதானவர் விருது பெற்ற ஒரு நடிகை. ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களின் ஆக்கிரமிப்பில் இருந்தபோது அவர் அதற்குள் பிரவேசித்திருத்தார். ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் அவர் ஒரு துடிப்பான பேச்சாளராகவும் இருந்தார்.போராட்டங்களில் ஈடுபட்டவர்களை வேட்டையாடுவது தற்போதைய அரசாங்கத்தின் அருவருக்கத்தக்க ஒரு நடவடிக்கையாகும். அது தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது.

ஆனால், அடக்குமுறை தொடர்கிறது. அதிகாரத்தில் உள்ளவர்கள் விவேகமற்றவர்கள் என்பதனால் அல்ல, தங்களது நலன்களைக் பாதுகாப்பதில் அவர்கள் விவேகமானவர்கள் என்பதனாலேயே அவ்வாறு நடைபெறுகிறது. அவர்கள் நீண்டகாலம் பதவியில் இருக்கவேண்டும் என்பதற்காக எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வேண்டியது அவசியம் என்று உணர்ந்து செயற்படுகிறார்கள். பழைய மாதிரியான ஆட்சிமுறைக்கு சாத்தியமாளனவு விரைவாக திரும்புவதற்கும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஏற்கெனவே பதவிகளை வகிக்கும் 21 அமைச்சர்களுக்கு மேலதிகமாக 38 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியினால் கடந்தவாரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் ஊழல் நடவடிக்கைகளிலும், அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு குறிப்பிடத்தக்க மீள்வருகை. மூன்று மாதங்களுக்கு முன்னர் மக்கள் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அவர்கள் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டார்கள்.

அடுத்த தேர்தல்கள் வரை ஒரு இடைக்காலத்துக்கு 15 க்கும் மேற்படாத அமைச்சர்களுடன் கூடிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சர்களின் தொகை 60 க்கும் அதிகமாகக் கூடிய சாத்தியம் இருக்கிறது. அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும், எஞ்சியவர்கள் வேறு கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களாகவும் இருப்பர். இது "சர்வகட்சி அரசாங்கம்" என்பதை கேலிக்கூத்தாக்குகிறது.

உண்மையில், போராட்ட இயக்கத்தை சேர்ந்தவர்களைத் தவிர முக்கியமான சகல கட்சிகளும் அவற்றின் சுயநலன்களுக்காகவே செயற்படுகின்றன என்றுதான் கூறவேண்டும்.பொருளாதார இடர்பாடுகளினாலும், விரைவான மாற்றத்துக்கான இலட்சியத்தாலும் தூண்டப்பட்ட உணர்வுகளினால் போராட்டக்காரர்கள் கட்டுண்டார்கள். தேசிய நலனுக்காக சிந்தித்ததற்காகவும், ஊழல்தனமான அரசியல் தலைவர்களை பதவிகளில் இருந்து விரட்டிவிட்டு முறைமை மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கோரியதற்காகவும் அவர்கள் இப்போது ஒவ்வொருவராக விலையை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கைகளில் சட்ட அதிகாரமும் இராணுவ பலமும் இருக்கிறது என்பதை தெரிந்துகொண்டிருந்த போதிலும் கூட இந்த கோரிக்கைகளை முன்வைக்க போராட்ட இயக்கத்தவர்கள் பயப்படவில்லை.

மறுபுறத்தில் அரசாங்கம் அதன் சொந்த நலனைப் பற்றி சிந்தித்துக்கொண்டு சலுகை அரசியலின் மூலமாக அதன் நாடாளுமன்ற பெரும்பான்மையை பேணுவதில் அக்கறையுடன் செயற்படுகிறது. ஆளும் கட்சி அதன் தன்னலத்துக்காக ஜனாதிபதி மீது பிரயோகித்த நெருக்குதல் காரணமாகவே அவர் பெரும் எண்ணிக்கையில் அமைச்சர்களை நியமித்தார். அந்த அமைச்சர்களில் 'அரகலய' உச்சக்கட்டத்தில் இருந்தபோது அரசாங்கத்தில் இருந்து பதவி விலகியவர்களும், சொந்த கட்சிகளின் ஒழுங்கு கட்டுப்பாட்டை மீறி வெளியே வந்தவர்களும் அடங்குகிறார்கள். அவர்கள் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லாதவர்கள்.

### ஆர்ப்பாட்டத்தை குற்றமாக்குதல்

நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் பெரும்பான்மைப் பலத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஆளும் கட்சியே உண்மையில் அதிகாரத்தை கையில் வைத்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு ஆரம்பத்தில் இருந்த 2/3 பெரும்பான்மையில் பிளவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பிரிந்து சென்றிருக்கும் குழுக்கள் தங்களை பெரும்பான்மையினராக அணிதிரட்டி அரசாங்கத்தை தோற்கடிக்கக் கூடியவர்களாக இல்லை. அமைச்சர் பதவியை இன்னமும் பெறாமல் இருக்கும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்திருப்பதால் எதிர்காலத்தில் மேலும் அமைச்சர்கள் நியமிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாகனங்கள், வீடுகள் மற்றும் தனிப்பட்ட உதவியாளர்கள் நியமனம் என்று இந்த அமைச்சர்களுக்கான வசதிகளுக்காக பெருமளவு பணம் செலவாகிறது. தேசிய வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக பட்ஜெட் பற்றாக்குறையை குறைப்பதற்கு அரசாங்கம் கடுமையாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அமச்சர்களுக்கான இந்த செலவுகள் பெரும் வீண்விரயமாகும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தொடரும் அடக்குமுறையின் பின்புலத்தில் நோக்கும்போது அரசாங்கம் மீது மக்கள் எதிர்ப்பு கிளம்புவதற்கு இப்போதைக்கு சாத்தியமில்லை. இது அரசியல் உறுதிப்பாடு ஏற்படுகிறது என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது. அரசாங்கம் மக்கள் போராட்டங்களை ஒடுக்கும் அதன் முயற்சிகளில் பயனைக் கண்டிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை முழுப்பலத்துடன் பயன்படுத்துவதன் மூலம் இதை அரசாங்கம் சாதித்திருக்கிறது.

அரசாங்கத்திடம் இருக்கும் ஆயுதங்களில் பிரதானமான சட்ட ஆயுதம் பயங்கரவாத தடைச்சட்டமாகும். வடபகுதியில் வளர்ந்துகொண்டிருந்த தமிழ் தீவிரவாதத்துக்கு எதிராக பயன்படுத்துவதற்கு தற்காலிகமான ஒரு ஏற்பாடாகவே இந்த சட்டம் 1979 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. போராட்ட இயக்க தலைவர்கள் சிலருக்கு எதிராக இந்த சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியிருக்கிறது. தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களிடம் இருந்தோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளிடம் இருந்தோ வந்திருக்கக்கூடிய ஆட்சேபனைகளை அரசாங்கம் அலட்சியம் செய்திருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டம் பயங்கரவாதத்தின் அர்த்தத்தை வரைவிலக்கணம் செய்யவில்லை. ஆனால், அரசாங்கம் பயங்கரவாதத்தை வரைவிலக்கணம் செய்வதில் நிராயுதபாணிகளினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தையும் சேர்த்திருக்கிறது.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை அரசாங்கம் குற்றச்செயலாக கருதி அடக்குமுறையை மேற்கொள்கிறது. அதன் காரணத்தினால்தான் மக்களின் பொருளாதார நிலைமை தொடர்ந்தும் மோசமாகிக்கொண்டு போகின்றபோதிலும் கூட இப்போது போராட்ட இயக்கம் மீண்டும் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறியைக் காணவில்லை. போராட்ட இயக்க தலைவர்களை அரசாங்கம் இலக்கு வைப்பதால் (6 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றதைப் போன்று ) திட்டமிடப்படாத முறையிலும், தன்னெழுச்சியாகவும் பொதுமக்கள் குழுக்கள் எதிர்காலத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தடுக்ககூடியதாக இருக்கும்.

போராட்ட இயக்கத்துடன் தொடர்புபட்டிருந்தவர்களும், போராட்டங்களின்போது வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுமாக 4000 க்கும் அதிகமானவர்கள் அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள். இவர்களில் எந்தவிதமான வன்முறையிலும் இறங்காமல் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

போராட்ட இயக்கத்துக்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்கள் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் இருக்கும் நிலையில், அல்லது நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டு பிணையில் விடப்பட்டிருக்கும் நிலையில், முன்னைய ஜனாதிபதியை பதவி துறக்கவைத்ததுடன், முன்னைய அரசாங்கத்தையும் பதவியில் இருந்து இறங்கச் செய்ததைப் போன்ற மக்கள் கிளர்ச்சியொன்று எதிர்காலத்தில் இடம்பெறுவதற்காக சாத்தியப்பாடுகள் குறைவு.

தற்போது அரசாங்கத்துக்கு ஒரு தடுப்பை போடக்கூடியதென்றால் அது சர்வதேச நெருக்குதல் மாத்திரமே. சட்ட மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக்கூடிய சாத்தியப்பாட்டுக்கான ஒரு அறிகுறியாக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரினால் வெளியிடப்பட்ட பூர்வாங்க அறிகையை கருதலாம். அரசியலமைப்பு ரீதியான கட்டுப்பாடுகளை அல்லது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய தேவையை காரணம் காட்டி சர்வதேச நெருக்குதலின் கவனத்தை திருப்புவதென்பது அரசாங்கத்துக்கு கஷ்டமானதாகவே இருக்கும்.

இலங்கையில் சகல தரப்பினராலும் இழைக்கப்பட்டிருக்கக்கூடிய சர்வதேச குற்றங்களைச் செய்தவர்களை பொருத்தமான சர்வதேச வலையமைப்பு ஊடாகவும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும், (ஏற்றுக்கொள்ளப்பட்ட புலம்கடந்த அல்லது சர்வதேச நியாயாதிக்க கோட்பாடுகளின் கீழ் உட்பட) தேசிய நியாயாதிக்கத்தில் உள்ள நீதிச் செயன்முறைகள் ஊடாக விசாரித்து வழக்குத் தொடர்வதற்கும், மோசமான சர்வதேச மனித உரிமை மீறல்கள் அல்லது கடுமையான மனிதாபிமானச் சட்டமீறல்களில் ஈடுபட்டதாக நம்பகமாக குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத்தடைகள் போன்ற தடைவிதிப்புக்களை செய்வதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கும், இலங்கையில் மனித உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்திய பொருளாதாரக் குற்றங்களை விசாரித்து களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் சர்வதேச சமூகம் ஒத்துழைக்கவேண்டும் என்று உயர்ஸ்தானிகரின் அறிக்கை விதப்புரை செய்கிறது.

இவ்வாரம் ஆரம்பமாகியிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இம்மாத பிற்பகுதியில் இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இது முன்னர் எதிர்பார்க்கப்படாததாகும். இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுப்பதற்கு ஜெனீவாவில் உள்ள இலங்கை அரசாங்க தூதுக்குழு ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகள் மத்தியில் ஆதரவை திரட்டும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. பெரும்பான்மையான மக்களை வறுமையின் எல்லைக்கோட்டுக்கு அல்லது மெய்யான வறுமைக்கு தள்ளிவிட்டிருக்கும் பொருளாதார சவால்களை சமாளிப்பதாக இருந்தால் சர்வதேசத்தின் தடைகள் அல்ல, அதன் புரிந்துணர்வும் ஆதரவுமே இலங்கைக்கு தேவை என்பதே தூதுக்குழுவின் வேண்டுகோளாகும்.

ஆனால், ஐக்கிய இராச்சியமும், அமெரிக்காவும், ஜேர்மனி மற்றும் கனடாவுடன் சேர்ந்து (அவையே தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கும் முக்கிய நாடுகள்) இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவைக் கொண்டுள்ளன என்று கூறப்படுகிறது.

நம்பகமான சான்றுகள் உள்ளவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்கு தங்களது சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படக்கூடிய சர்வதேச நியாயாதிக்கத்தை செயற்படுத்துவதற்கு விரும்புகின்ற நாடுகளுக்கு சட்ட மற்றும் ஏனைய வழிகாட்டல்களை வழங்கி உதவுவதே தீர்மானத்தின் நோக்கமாகும். இலங்கையில் மனித உரிமைகள் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்பான அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மான வரைவு விதப்புரை செய்கிறது.

இலங்கையை முழுமையாக எதிர்மறையான முறையில் பாதிக்கக்கூடிய தடைகளை விதிப்பதை விடுத்து உரிமைமீறல்களைச் செய்த முக்கிய குற்றவாளிகளை இலக்குவைப்பதே சர்வதேச சமூக தந்திரோபாயமாக இருப்பதாக தோன்றுகிறது.

ஜெனீவாவில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு அனுசரணையாக செயற்படும் அமெரிக்கா சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்கவும், விவசாயிகளுக்கு ஆதரவாகவும், ஏனைய நலன்புரி நோக்கங்களுக்காகவும் 6 கோடி டொலர்களை ஒதுக்கீடு செய்யும் உறுதியளித்ததில் இருந்து இதை புரிந்துகொள்ளமுடியும்.

சர்வதேச உதவி நாட்டுக்கு அவசியமாக தேவைப்படுகின்ற இத்தகைய பின்புலத்தில், கடந்த காலத்தில் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிராக தேசியவாத எதிர்ப்பை தூண்டிவிட்டதைப் போன்று இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் செய்யக்கூடியது சாத்தியமில்லை.

பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்பானவர்களையும், எதிர்ப்பியக்கங்களை நசுக்குவதில் நாட்டம் கொண்டிருப்பவர்களையும் பொறுப்புக்கூற வைக்கக்கூடிய நடவடிக்கைகளை பலர் ஏற்றுக்கொள்வார்கள்.

அபிவிருத்தியை தாமதிக்கின்றதும், மக்களின் அவலங்களை நீடிக்கின்றதுமான அடக்குமுறை பெரும்பாலும் சகலருக்குமே பாதிப்பாக அமையக்கூடிய கொந்தளிப்புகளையே கொண்டுவரும். இதை நன்றாக தெரிந்துகொண்டாலும், அரசியல் தலைவர்கள் தங்களது ஆட்டத்தை தொடர்ந்தால் தேசிய அனர்த்தத்துக்கே அது வழிவகுக்கும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

ஆசியா கப்பையே தூக்கிட்டம் எண்டாலும், ஆசையா தேத்தண்ணி கப் ஒண்டு குடிக்க முடியாத நிலையிலதான் நாங்கள் இருக்கிறம்..!



## இன்றைய நாளில்...

★ 1954 – சோவியத் ஒன்றியம் அணு ஆயுத சோதனையை மேற்கொண்டது.

★ 1959 – சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.

★ 1960 – எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) உருவாக்கப்பட்டது.

★ 1984 – ஜோ கிட்டிங்கர் வளிமக் கூண்டில் அட்லாண்டிக் பெருங்கடலைத் தாண்டிய முதல் மனிதர் என்ற சாதனையைப் படைத்தார்.

★ 1985 – மலேசியாவின் மிக நீளமான பாலமான பினாங்கு தீவையும், பெரும்பரப்பையும் இணைக்கும் பினாங்கு பாலம் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டது.

★ 1999 – கிரிபட்டி, நவூரு, தொங்கா ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகளில் இணைந்தன.

★ 2000 – எம்.எஸ். டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.

★ 2000 – விண்டோஸ் மில்லேனியம் வெளியிடப்பட்டது.

★ 2005 – நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

★ 2015 – ஈர்ப்பு அலைகள் குறித்த முதலாவது அவதானிப்பு அறிவிக்கப்பட்டது.

# பாரம்பரிய விதிமுறைகளை புறந்தள்ளிவிட்டு மருந்து விநியோகத்துக்காக அதிகபட்ச நடவடிக்கையை எடுங்கள்!

**நிதி ஒதுக்கீடு செய்தும் தட்டுப்பாடு ஏற்படுமாயின் அதற்கான பொறுப்பை சுகாதாரப் பிரிவினரே ஏற்கவேண்டுமென அதிகாரிகளிடம் அமைச்சர் தெரிவிப்பு**





மக்களின் உயிர் ஏனைய சகல விடயங்களையும் விட பெறுமதிமிக்கதென்பதால், ஒருசில பாரம்பரிய விதிமுறைகளை தளர்த்தி மக்களுக்கு தேவையான மருந்துகளை விநியோகிப்பதற்காக முன்னெடுக்கக்கூடிய சகல விடயங்களையும் விரைவாக முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹேலிய ரம்புக்வெல்ல நேற்று முன்தினம் (12) அந்த அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவின் தலைமையில் அமைச்சில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்ரகுப்த உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள், மருத்துவ சேவை பிரிவு, அரச மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் கூட்டுத்தாபனம், அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதன்போதே அமைச்சர் இவ்வாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மருந்துகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்படுமாயின், அதனை சுகாதார துறைசார் பிரிவுகளே பொறுப்பேற்க வேண்டும்.

மக்களுக்குத் தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுக்கும்போது மருந்துவ சேவைப் பிரிவு தேவையான தகவல்களை முறையாக மேம்படுத்தி, எந்தவொரு தட்டுப்பாடுமின்றி மக்களுக்குத் தேவையான மருந்துகளை விரைவாக விநியோகிப்பதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களிடையே நல்ல உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும்போது, சர்வதேச ரீதியில் பெற்றுக்கொடுக்கப்படும் கடன் அல்லது உதவித்தொகை ஆகிய முறைகளுக்குச் செல்வது தொடர்பில் பிரதானமான கவனம் செலுத்தி செயற்படவேண்டும். அவ்வாறான, வேலைத்திட்டங்களில் இடம்பெறும் மந்தநிலையான செயற்பாடுகள் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுவதற்கு காரணமாகிவிடும்.

நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளுக்கு முதலிடம் கொடுத்து அவற்றை அடையாளங்கண்டு, அவற்றை முறையாக விநியோகிப்பதற்காக வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வைத்தியசாலை பணிப்பாளரினூடாக மருந்து தொடர்பான புதிப்பிக்கப்பட்ட நிலைவர தகவல்களை விரைவாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, புற்றுநோய் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அதற்கான மருந்துகளை விநியோகிப்பதற்கு முக்கிய கவனம் செலுத்தி செயற்பட வேண்டும்.

தேசிய விநியோகத்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை விநியோகிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தற்போது நிலவும் ஒருசில இடையூறுகளின் காரணமாக, அதனை முறையாக செயறபாட்டுக்கு கொண்டுவருவதற்கு முடியாத நிலை ஏறபட்டுள்ளது.

அதன் காரணமாக, அவ்வாறான நிலை தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவர்களுக்குத் தேவையான விநியோகத்துக்காக வேலைத்திட்டமொன்றை தயாரிக்கவேண்டுமென அமைச்சர் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்திய நிபுணர் சீதா அரம்போபொல, சுகாதார அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், பிரதி பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சுகாதார அமைச்சுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

## தங்க நகைகளை திருடிய நால்வர் பொலஸாரால் கைது

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

வீடொன்றை உடைத்து தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை கெக்கிராவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திப்பட்டுவெவ பகுதியிலுள்ள வீடொன்றை உடைத்து அங்கிருந்த தங்க நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது, குற்றத்தடுப்புப் பிரிவு பிரிவினருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் பொலிஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட தங்க நகைகளில் ஒரு தொகுதி வங்கியில் அடகுவைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலும் சில தங்க நகைகள் கொழும்பு பகுதியிலுள்ள நபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தம்புள்ளை மற்றும் கெக்கிராவ பகுதிகளைச் சேர்ந்த 43, 39, 29 மற்றும் 32 வயதுடைய நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவில் அடிமைப்பட்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகள் குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## மயிலிட்டியில் இடம்பெற்ற 100 நாள் செயல் முனைவுப் போராட்டம்





*(சாவகச்சேரி நிருபர்)*

தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் 100நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 42ஆவது நாள் நிகழ்வுகள் அண்மையில் மயிலிட்டி பகுதியில் இடம்பெற்றிருந்தது.

குறித்த போராட்டத்தில் சட்டத்தரணி சிவஸ்கந்தசிறி சிறுபான்மையின மக்களுக்கு கௌரவமான அரசியல் உரிமையை வழங்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்தியிருந்தார்.

மேலும் குறித்த நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு கௌரவமான அரசியல் உரிமையை வழங்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பண்டாரகம - களுத்துறை வீதியில் கார் விபத்து



பண்டாரகம, களுத்துறை வீதியின் யட்டியன பகுதியில் நேற்று (13) இடம்பெற்ற விபத்தில் மூதாட்டியொருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியில் பயணித்த மூதாட்டி ஒருவரை பின்னால் வந்த காரொன்று மோதியுள்ளது. இந்த விபத்தினால் குறித்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யட்டியன பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதுடைய மூதாட்டியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த பெண் அந்த பகுதியிலுள்ள வீட்டில் இரவு வேலை செய்துவிட்டு வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றள்ளது.

பண்டாரகமவிலிருந்து களுத்துறை நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி அதே திசையில் சென்றுகொண்டிருந்த குறித்த மூதாட்டியை மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான குறித்த மூதாட்டி சம்பவ இடத்திலிருந்து 23 மீற்றர் தூரத்தில் தூக்கி வீசப்பட்டு விழுந்துள்ளார். சந்தேகநபர் விபத்தை ஏற்படுத்திவிட்டு 70 மீற்றர் தூரத்தில் காரை நிறுத்தியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காரை ஓட்டிச்சென்ற 23 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காரை ஓட்டிக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட நித்திரையின் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கைதிகள் தினத்தில் 417 பேர் பொதுமன்னிப்பில் விடுதலை

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 பேர் விசேட பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளதாவது,

செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி கைதிகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் 34ஆவது உறுப்புரையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு அதிகாரங்களுக்கமைய இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தண்டப்பணம் செலுத்தத் தவறிய மற்றும் சிறிய தவறுகளுக்காக சிறைச்சாலைகளுக்கு வந்த கைதிகள் சிலரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட கைதிகளிடையே பெண்கள் நால்வர் உள்ளடங்குவதாக திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகளிலுள்ள நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்காக புதிய முறையை அடையாளம் காண்பது அவசியமென்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அநுர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

## தாய்ப்பால் புரையேறி 45 நாள் குழந்தை உயிரிழப்பு

தாய்ப்பால் புரையேறி ஒன்றரை மாதக் குழந்தை உயிரிழந்துள்ளதாக ஹொரொவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரொவப்பொத்தானை, 77 ஆம் கட்டை, மொரகேவவையைச் சேர்ந்த நிபுல சங்சன என்றழைக்கப்படும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை தாய்ப்பால் அருந்திகொண்டிருந்தபோது புரையேறியுள்ளதுடன் அந்த சந்தர்ப்பத்திலேயே குழந்தையை ஹொரொவப்பொத்தானை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளதாகவும், அந்த மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**13.09.2022 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 2548 | 145 015 |
| கனேடியன் டொலர் | 162 8400 | 175 4635 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 703 | 43 26 |
| யூரோ | 25 8606 | 265 2645 |
| ஜப்பான் யென் | 1 4 01 | 1 5 4 |
| சிங்கப்பூர் டொலர் | 144 181 | 154 8806 |
| ஸ்ரேலிங் பவுன் | 306 0651 | 322 682 |
| சுவிஸ் பிரான்ங் | 261 8473 | 28 8588 |
| ஐ.அ.டொலர் | 247 677 | 258 5072 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 812 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 2146 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 870 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7867 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3 06 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 5201 |





கொழும்பு, ஸ்ரீ கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ தேர்த் திருவிழா நேற்று (13) ஆதீனகர்த்தா திருமதி மகேஸ்வரி சிறிதரன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள். எம்.நசார்)

# மறைந்த ராணி எலிசபெத்துக்காக 18இல் மௌனிக்கிறது பிரிட்டன்

## ''இறுதிச்சடங்கிற்கு தனி விமானம் - காரில் வரக்கூடாது''; உலகத் தலைவர்களுக்கு கடும் நிபந்தனைகள்

மறைந்த ராணி எலிசபெத்தின் உடல் ஸ்கொட்லாந்திலிருந்து லண்டனிலுள்ள பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், இன்று பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து நாடாளுமன்ற வளாகத்திலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அரங்குக்கு ராணியின் உடல் கொண்டுசெல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக 4 நாட்கள் வைக்கப்படவுள்ளது.

அத்தோடு ராணி எலிசபெத்தின் மறைவுக்கு பிரித்தானியா முழுவதும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி கடைப்பிடிக்கப்படும். எதிர்வரும் 18ஆம் திகதி இரவு 8 மணிக்கு நாடு முழுவதும் மக்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளன. அன்றைய தினம் இறுதிச்சடங்கில் பங்கேற்கும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு பிரித்தானிய அரசு கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

**18இல் மௌனிக்கும் பிரிட்டன்**

பிரிட்டனை கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிசெய்த ராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 8ஆம் திகதி காலமானார். இவரது இறுதிச்சடங்கு எதிர்வரும் 19ஆம் திகதி லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் நடைபெறவுள்ளது.

ராணி எலிசபெத் உடல்நலம் குன்றிய நிலையில், ராணிக்கு மிகவும் பிடித்தமான ஸ்கொட்லாந்தின் பல்மோரல் அரண்மனையிலேயே வசித்துவந்த நிலையில், பல்மோரல் அரண்மனையிலேயே அவரது உயிர் பிரிந்தது.

பல்மோரல் அரண்மனையிலிருந்த மறைந்த ராணி எலிசபெத்தின் உடல் கடந்த 11ஆம் திகதி ஸ்கொட்லாந்து தலைநகர் எடின்பர்க் நகருக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஹோலிரூட் ஹவுஸ் மாளிகையில் வைக்கப்பட்டிருந்தது.

'ஓக்' மரத்திலான பேழையில் வைக்கப்பட்டு பல்மோரல் கோட்டையிலிருந்து புறப்பட்ட ராணி எலிசபெத்தின் உடல், எடின்பரோ நகருக்கு கொண்டுசெல்லப்பட்டபோது, வழியெங்கும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வரிசையில் நின்று காரில் வைக்கப்பட்டிருந்த ராணியின் உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் 12ஆம் திகதி ஹோலிரூட் ஹவுஸ் மாளிகையிலிருந்து செயிண்ட் கில்ஸ் தேவாலயத்திற்கு சிறப்பு ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டது.

செயிண்ட் கில்ஸ் தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனை நடத்தப்பட்டு, 24 மணிநேரம் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்நிலையில், ராணி எலிசபெத்தின் உடல் நேற்று (13) தனி விமானம் மூலம் லண்டனிலுள்ள பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இன்று (14ஆம் திகதி) பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து நாடாளுமன்ற வளாகத்திலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அரங்குக்கு ராணியின் உடல் கொண்டுசெல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக 4 நாட்கள் வைக்கப்படும்.

ராணி எலிசபெத்தின் மறைவுக்கு பிரித்தானியா முழுவதும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி கடைப்பிடிக்கப்படுகிறது. எதிர்வரும் 18ஆம் திகதி இரவு 8 மணிக்கு நாடு முழுவதும் மக்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

19ஆம் திகதி எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் இடம்பெறவுள்ளன. இதில் உலகத் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். அன்று பிரித்தானியாவில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**இறுதிச்சடங்கில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுக்கு கடும் நிபந்தனைகள்**

அவரது இறுதிச்சடங்கில் பங்கேற்க வரும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு அந்நாட்டின் வெளிநாட்டு மற்றும் பொதுநல மேம்பாட்டு அலுவலகம் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. இது தொடர்பாக நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் விவரம் வருமாறு:

★ தலைவர்கள் தனி விமானங்கள், ஹெலிகொப்டர்களில் வருவதை தவிர்த்து பயணிகள் விமானத்தில் வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

★ வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கு வரும்போது தங்களது அரசுக்கு சொந்தமான கார்களில் வராமல் மேற்கு லண்டனிலிருந்து பஸ்ஸில் வர வேண்டும்.

★ இறுதிச்சடங்கு மற்றும் அது தொடர்பான நிகழ்வுகளில் இடநெருக்கடி ஏற்படுவதை தவிர்க்க, நாட்டின் மூத்த பிரதிநிதி மற்றும் அவரது மனைவிக்கு மட்டுமே இடம் ஒதுக்கப்படவுள்ளது.

★ முதன்மை அரசு விருந்தினர் குடும்பத்தினர், ஊழியர்கள் அல்லது குழுக்களுக்கு அனுமதி கிடையாது.

★ பங்கேற்க முடியாத தலைவர்கள் தங்களது அரசின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக மூத்த அமைச்சர்களை அனுப்பலாம்.

★ மன்னர் 3ஆம் சார்ள்ஸ் இறுதிச் சடங்கில் பங்கேற்க வரும் தலைவர்களுக்கு பெக்கிங்ஹாம் அரண்மனையில் அடக்கத்திற்கு முந்தைய ஞாயிறு இரவில் விருந்தளிப்பார்.

**தாய் குறித்து சார்ள்ஸ் உருக்கம்**


ராணியின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் பாரம்பரிய நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் புதிய மன்னராக பொறுப்பேற்று கொண்டுள்ள மூன்றாம் சார்ள்ஸ் உரையாற்றினார்.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் அரங்கில் நடந்த இந்தக் கூட்டத்தில் 900 எம்.பிக்கள் பங்கேற்றனர். எம்.பிக்கள் சார்பில் மறைந்த ராணிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் உரையாற்றுகையில்,

''தன் இளம் வயதில் நாட்டின் ராணியாக பொறுப்பேற்றபோது, இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்ற என்னுடைய தாய் உறுதியேற்றார்.

தன்னலமில்லாமல் தன் கடமையை நிறைவேற்றுவதை அவர் தன் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்தார். என்னுடைய தாயின் வழியில், நம் அரசியல் சாசனத்தின் உயரிய கொள்கைகளை கடைப்பிடிப்பேன். தன்னமில்லாமல் கடமையை நிறைவேற்றுவதன் சின்னமாக ராணி விளங்குகிறார்.

அந்த பாரம்பரியத்தை, கடவுளின் அருளோடும், உங்களுடைய ஆலோசனையுடனும் தொடர்வேன். நம் நாட்டில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருப்பதற்கு காரணமாக இந்த நாடாளுமன்றம் விளங்குகிறது. நம்முடைய உறவு எப்போதும்போல் சிறப்பாகவே இருக்கும்'' - இவ்வாறு அவர் பேசினார்.



*எடின்பரோவிலுள்ள செயிண்ட் கில்ஸ் தேவாலயத்துக்கு ராணி எலிசபெத்தின் உடல் அடங்கிய பேழை பேரணியாக எடுத்துச்செல்லப்பட்டபோது உடன் சென்ற ராணியின் பிள்ளைகளான மன்னர் சார்ள்ஸ் மற்றும் அவரது சகோதரி இளவரசி ஏன் (Princess Anne) சகோதரர்களான என்ட்ரூ மற்றும் எட்வர்ட் (Andrew and Edward)....*









உலக செய்திகள்

---

15 மனைவி - 107 குழந்தைகள்....

# மினி கிராமத்தை பெற்று ஒரே வீட்டில் மகிழ்ச்சியாக வளர்க்கும் தந்தை

**இன்னும் 10 பெண்களை திருமணம் முடிக்க விருப்பம் தெரிவிக்கும் கென்ய முதியவர்**

கென்யாவில் 61 வயதாகும் டேவிட் சாகாயோ கலலுயானா என்பவர், தற்போது வரை 15 மனைவி, மகன் - மகள் என 107 குழந்தைகளுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து சுவரஸ்யமான செய்தி வலைதளங்களில் வைரலாகியுள்ளது.



தமது மினி கிராமம் குறித்து டேவிட் தெரிவிக்கையில்,

''நான் என் மனைவிகளின் விருப்பமானவராக இருக்கிறேன். அவர்கள் கண்ணுக்கு புத்திசாலியாகவும் இருக்கிறேன். அவர்களை சமாளிக்கக்கூடிய யுக்தி எனக்கு நன்றாகாவே தெரியும். அதனால் தான் இத்தனை பெண்களை திருமணம் செய்துள்ளேன். இவர்களுக்குள் இதுவரை சண்டை வந்ததே இல்லை. நாங்கள் அனைவரும் ஒரே குடும்பம்; கூட்டு குடும்பமாக வாழ்கிறோம். இன்னும் 10 பெண்களை திருமணம் செய்ய வேண்டுமென்றால் செய்வேன்'' - என்றார்.

---

# தோட்டத் தொழிலாளி மீது அதிகாரிகள் தாக்குதல்: நீதி கோரி லுணுகலை மக்கள் போராட்டம்

*(பதுளை நிருபர்)*

தோட்டத் தொழிலாளர் மீது தோட்ட அதிகாரிகள் இருவர் தாக்குதல் நடத்திய சம்பவத்தைக் கண்டித்து லுணுகலை – ஹொப்டன், பங்களா டிவிசன் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

லுணுகலை, ஹொப்டன் - பங்களா பிரிவிலுள்ள தேயிலை தொழிற்சாலை ஆலயத்தில் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது தோட்டத்தின் இரண்டாம் நிலை அதிகாரியும், தோட்ட உத்தியோகத்தர் ஒருவரும் இணைந்து தொழிலாளி ஒருவர்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான தொழிலாளி ஹொப்டன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு – அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், தோட்ட அதிகாரிகளின் செயலை வன்மையாகக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு நீதி கோரியும் அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் இறங்கினர். தொழிலாளியை தாக்கிய இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

---

# ''ஆயிரம் ரூபா வேதனம் வழங்கினாலும் அது போதுமானதாக இல்லை அரசே உடன் நடவடிக்கை எடு; தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை தடு''

**ஆர்ப்பாட்டத்தில் குதித்த சாமிமலை மல்லியப்பூ தோட்டத் தொழிலாளர்கள் வலியுறுத்து**



*(மஸ்கெலிய நிருபர்)*

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட ஆர்.பி.கே.பிலாண்டேசனுக்கு உரித்தான சாமிமலை மல்லியப்பூ தோட்ட தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் பணி பகிஸ்கரிப்பு - ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''நாளொன்றுக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என நீதிமன்றம் உத்தவிட்டிருக்கிறது. எனினும், தோட்ட நிர்வாகிகள் நீதிமன்ற உத்தரவின் படி வேதனம் வழங்கவில்லை.

மாறாக பறிக்கும் ஒருகிலோ பச்சை தேயிலைக் கொழுந்துக்கு 50/= ரூபாய் வீதம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இன்று சகல பொருட்களுக்குமான விலை பல மடங்கு உயர்ந்ததுள்ளது.

ஆயிரம் ரூபாய் வேதனம் வழங்கினாலும் எமக்கு அந்த வேதனம் உகந்ததாக இல்லை. இவ்வாறான கால கட்டத்தில் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுத்து பெருந்தோட்ட தொழிலாளர்கள் பாதிக்க படுவதை தடுக்க வேண்டும்'' என கோரிக்கை முன்வைத்து தோட்டத் தொழிலாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தனர்.

---

# மஹியங்கனை 18ஆம் வளைவு பகுதியில் ஆயுதங்களை ஏற்றிச்சென்ற லொறி விபத்து



*(கண்டி நிருபர்)*

கண்டி - மஹியங்கனை வீதியின் 18ஆவது வளைவு பகுதியில், ரி-56 துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்களை ஏற்றிச்சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளானது.

குண்டசாலை பொலிஸ் பயிற்சி பாடசாலையில் பொலிஸ் பயிலுநர்களின் துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சிக்காக எடுத்துச்செல்லப்பட்ட ஆயுத லொறியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

பயிற்சிக்த் தேவையான ரி-56 துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் மேற்படி லொறியில் ஏற்றிச்செல்லப்பட்டுள்ளன.

கண்டி - மஹியங்கனை வீதியின் 18 வளைவுகளைக்கொண்ட பிரதேசத்தில் 11ஆவது வளைவுக்கு அருகில் விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தின்போது, சப்-இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகள் வாகனத்தில் பயணம் செய்துள்ளனர்.

---

**தோட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்க்காது**

# அமைச்சுப் பதவிகளிலேயே குறியாக இருக்கும் மலையக அரசியல் தலைமைகள்

**கண்டி நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவிப்பு**

*(கண்டி நிருபர்)*



''மலையக அரசியல் தலைமைகள் தோட்ட மக்களது பிரச்சினைகளை தீர்க்காது அமைச்சுப் பதவிகள் குறித்து பேசுவதிலே மும்முரம் காட்டுகின்றனர்'' என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''மக்களின் மீளெழுச்சி தற்போது ஆரம்பித்துள்ளது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்ததும் அவருக்கு சற்று கால அவகாசம் வழங்க வேண்டும் என மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால், மக்களின் பிரச்சினைக்குப் பதில், ஏற்கனவே சிக்கலில் மாட்டிய அமைச்சர்களது பிரச்சினைகளையும் ராஜபக்ஷர்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதிலேயே அவர் தீவிரம் காட்டி வருகிறார்.

அவர் மொட்டு கட்சியின் பிரதிநிதியாக இருந்து அக்கட்சியின் முக்கியஸ்தர்களின் மறுவடிவமாக செயற்படுகிறார்.

எமது நாடாளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் எம்.பிக்களாக வந்து அமர்வது தான் நடக்கிறது. எனவே, எதிர்காலத்திலும் அப்படி நடக்கலாம். அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதே தவிர, நாட்டுமக்களுக்கு நடந்த சேவை ஒன்றும் இல்லை. பிரச்சினைகள் அதே வடிவில்தான் உள்ளன'' - என்றார்.

---

# பதுளை - கிலன்அல்பின் பெருந்தோட்டக் குடியிருப்பில் இரு பெண்கள் மர்மக் கொலை; ஒருவர் படுகாயம்

*(பதுளை நிருபர்)*

பதுளை, கிலன்அல்பின் பெருந்தோட்டத்தின் 'காத்தான்' வரிசைக் குடியிருப்பில் இரு பெண்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், பலத்த காயமடைந்த பெண் ஒருவர் பதுளை அரச மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் மேற்கொண்ட தீவிர புலன் விசாரணைகளில் 37 வயதுடைய ஓட்டோ சாரதியொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சாரதி கொலை செய்யப்பட்ட பெண்ணிடம் கடனாகப் பெற்றிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தை மீளச் செலுத்தாமையால் ஏற்பட்ட வாக்குவாதமே இந்த இரட்டைக் கொலைக்கு காரணமென பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் குறித்த பெண்களை அச்சுறுத்தி அவர்களது தங்க நகைகளை பெற்றுக்கொண்ட சந்தேக நபர், அந்நகைகளை பதுளை நகரின் பிரபல நகை அடகு வைக்கும் நிலையத்தில் அடகு வைத்துள்ளார். அதற்கான ரசீதுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இரு பெண்கள் சம்பவ தினம் கோரமாக கொலை செய்யப்பட்டும், மேலும் ஒரு பெண் பலத்த காயமடைந்த நிலையில் பதுளை அரச மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சம்பியாவிலுள்ள இலங்கையர்களால் ரேபிஸ் தடுப்பூசிகள் நன்கொடை



சம்பியா இலங்கை நட்புறவு சங்கத்தினூடாக சுகாதார அமைச்சுக்கு ஆயிரத்து 150 ரேபிஸ் தடுப்பூசிகளை (விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசிகள்) சம்பியாவிலுள்ள இலங்கையர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இந்த நன்கொடையானது, ரொனி பீரிஸுடன் இணைந்து சம்பியாவுக்கான இலங்கையின் தூதுவர் எல்மோ ஜயதிலக்கவினால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சின் வைத்தியர் அன்வர் ஹம்தானி இலங்கையிலிருந்து அண்மையில் ஒருங்கிணைத்திருந்தார்.

தூதுவரின் கூற்றுப்படி, சம்பியாவிலுள்ள இலங்கையர்களும் தமது தனிப்பட்ட திறன்களில் சுமார் 10,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருந்துகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

# அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் - சபாநாயகர் சந்திப்பு





அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங், சிரேஷ்ட வேலைத்திட்ட அதிகாரி லாரேஸ் மார்ஷல் ஆகியோர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (12) சந்தித்துக் கலந்துரையாடினர்.

பொதுமக்களின் பங்குபற்றலுடன் உறுதிமிக்க துறைசார் மேற்பார்வைக் குழு அமைத்தல் உட்பட இலங்கை நாடாளுமன்றத்தினால் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சாதகமான நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது சபாநாயகர், மார்ட்டின் சுன்கொங்குக்கு தெளிவுபடுத்தினார்.

தேசிய தேவைக்காக கொள்கை ரீதியில் மற்றும் முன்னுரிமை வழங்கவேண்டிய விடயங்கள் தொடர்பில் வழிகாட்டுவதற்காக நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளின் பங்குபற்றலுடன் நாடாளுமன்ற தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

அத்துடன், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதன் தேவை தொடர்பாகவும் சபாநாயகர் இதன்போது கவனம் செலுத்தியதுடன், தேர்தல் முறைமை திருத்தம் மற்றும் அரசியலமைப்பின் 22ஆம் திருத்தம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்க அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் பாராட்டுத் தெரிவித்தார். தேசிய அரசியல் விடயங்களில் இளைஞர் சமூகம், பெண்கள் மற்றும் ஏனைய தேவைகள் உடைய குழுக்களையும் பங்குபற்றிக்கொள்ளவைப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் அவர் கவனம் செலுத்தினார்.

மேலும், பிரித்தானிய நாடாளுமன்ற முறைமைக்கு சமமான வெளிப்படைத்தன்மையுடன் உறுதிமிக்க ஊடகப் பங்களிப்புடன் நாடாளுமன்றம் பொது மக்களுக்கு திறந்துவிடப்படுவது ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு காரணமாவதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க இதன்போது குறிப்பிட்டார். நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் கருத்தை அனுமதித்து, அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் தெடர்ந்து தெரிவிக்கும்போது, நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது முக்கியமாகும் என்பதுடன், சரியான தகவல்களை அவ்வாறே பொதுமக்களுக்கு சென்றடைய ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் எனக் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தை உறுதிப்படுத்த தொடர்ந்து இணைந்து செயற்படுவதாகவும் அவர் இதன்போது உறுதியளித்தார்.




# அமைச்சரவை முடிவுகள்

## 2022.09.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**★ பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நிறுவுதல்**

சமகால நெருக்கடியான பொருளாதார நிலைமையில் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக அதிக முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளவேண்டிய படிமுறைகள் தொடர்பாக துரிதமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, தேசிய பொருளாதார முகாமைத்துவப் பணிகளுக்குத் தேவையான மூலோபாய ரீதியான வழிகாட்டல்களை வழங்குவதற்காக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நிறுவுவது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. குறித்த குழுவானது, ஜனாதிபதியின் தலைமையில் பிரதமர் உள்ளிட்ட 05 அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ தேசிய இலக்கியக் கலைப் பெருவிழா நடத்துதல்**

இலக்கியம், கலை, அழகியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளை மேம்படுத்துவதற்காக அரச இலக்கிய விருது விழா, தேசிய இலக்கிய விழா மற்றும் தேசிய இலக்கியப் பெருவிழா வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்றது. தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் குறித்த விழாக்களை இவ்வாண்டில் நடத்துவது உகந்ததாக அமையாததால், அதற்குப் பதிலாக, குறித்த இலக்கிய விழாவின் அனைத்து தனித்துவமான பண்புகளை உள்ளடக்கிய வகையில் 'தேசிய இலக்கிய கலைப் பெருவிழா'வை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டப வளாகத்தில் அரசதுறை மற்றும் தனியார்துறை நிறுவனங்களுடன் இணைந்து இவ்விழாவை நடத்துவதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**★ இலங்கை காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல்கள் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான வேலைச்சட்டக சமவாயத்திற்குச் சமர்ப்பித்தல்**

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான வேலைச்சட்டக சமவாயத்தின் பங்காள அரசாக இலங்கை சமகால காலநிலை மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, 2000 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்பாடல் அறிக்கையில் காலநிலை, பொருளாதார மற்றும் சமூகச் சூழல், தேசிய பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றம், குறைப்பு மற்றும் கடந்தகால போக்குகள் பற்றிய தகவல் பட்டியல், பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கின்ற செயற்பாடுகள், காலநிலை மாற்றங்கள் தொடர்பான இடர்கள் மற்றும் அவற்றுக்கு இசைவாக்க நடவடிக்கைகள், கல்வி, பயிற்சி மற்றும் இயலளவு விருத்தி, தொழில்நுட்பப் பரிமாற்றங்கள், ஆய்வுகள் மற்றும் முறைசார்ந்த கண்காணிப்புகள் போன்றன உள்ளடக்கப்படல் வேண்டும்.

அதற்கமைய, காலநிலை மாற்றங்கள் தொடர்பாக நிபுணர் குழு மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துகளையும் யோசனைகளையும் பெற்றுக்கொண்டு சுற்றாடல் அமைச்சால் இலங்கையில் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல்கள் அறிக்கை – 2018-2021 தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான வேலைச்சட்டக சமவாயத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ சுகாதார அமைச்சுக்கு அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியிடல்**

நாடு எதிர்கொண்டுள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைக்கின்ற கருத்திட்டம் மற்றும் இடர்களைக் குறைக்கின்ற படிமுறைகள் மூலம் மண்சரிவு இடர்களைக் குறைக்கின்ற கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களின் விடயதானங்களைத் திருத்தம் செய்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் துரிதமாக வழங்குவதற்கு அவ்வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைக்கின்ற கருத்திட்டத்தின் மூலம் 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இடர்களைக் குறைக்கின்ற படிமுறைகள் மூலம் மண்சரிவு இடர்களைக் குறைக்கின்ற கருத்திட்டத்தின் மூலம் 30 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவுக்குப் பயன்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்காணும் ஒழுங்குவிதிகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசதுறையின் இறக்குமதிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் நடவடிக்கை ஒத்துழைப்புகளை உறுதிப்படுத்துவதற்காக ஒருசில தொழிற்றுறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இயலுமாகும் வகையில் 2022.08.23ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு அந்நியச் செலாவணிப் பணத் திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கி பரிந்துரைகளின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டுள்ள பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு 2022.08.23 திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

**★ அரச சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல்**

தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ் அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமையால் சேவை யாப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நேரிட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளைக் கையாண்டும், அத்துடன் கடந்தகால அரசாங்கங்களால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரமும் அடிக்கடி பட்டதாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் நேரடியாக அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையால், ஒட்டுமொத்தமாக அரச சேவை மிகையாக காணப்பட்டாலும் சேவைப் பிரிவுகளில் வெற்றிடங்கள் காணப்படுவதாக பதிவாகியுள்ளது.

அதேபோல், ஆட்சேர்ப்பின்போது பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கின்றமையால் ஏற்பட்டுள்ள விளைவாக அரச சேவையில் மேலெழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக பொருத்தமான படிமுறைகளை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. அதற்கமைய, மேற்குறிப்பிட்ட விடயங்களை மீளாய்வு செய்து, அரச சேவையை மிகவும் வினைத்திறனாகவும்,

பயன்வாய்ந்ததாகவும் மேற்கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளவேண்டிய அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் தொடர்பாக முன்னுரிமைகளை அடையாளங்கண்டு அவற்றுக்கான கால அட்டவணையை அறிமுகப்படுத்தவும்,

தற்போது அரச சேவையில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும் பிரதமரின் செயலாளர் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

திகதி 12.09.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4876
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,882,310.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,076,159.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 6 0 4 1 7 9

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3118
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,394,400.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 12 15 62 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,852,130.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1331
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,669,300.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 9 7 5 6 8 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,599,298.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 906
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,129,800.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 02 63 70 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 125,189,385.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 185
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,682,380.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 04 33 57 62
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,639,392.60

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1224
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,846,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 270,204,126.00
ஆங்கில எழுத்து X சுப்பர் நம்பர் 24 வெற்றி எண்கள் 07 46 50 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# இத்திஹாத்தி அஹ்லுஸ் ஸுன்னா வருடாந்த மாநாடும் நூல் வெளியீடும்









(பி.எம். முக்தார், அஷ்ரப் ஏ. சமட்)

இத்திஹாத்தி அஹ்லுஸ் ஸுன்னா வருடாந்த மாநாடும் அதன் தலைவர் கலாநிதி பஹ்மி இஸ்மாயில் எழுதிய 'ஷாதுலியா தரீக்கா வரலாறு' எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப ஓகிட் மண்டபத்தில் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் தலாத் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் அல்ஹாஜ் அன்ஸார் இப்றாஹிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

காலி அலியா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளர் மூத்த கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் முஹம்மது ஸுஹர் பாரி, ஜனாதிபதி சட்டத்தரணியும் ஷாதுலிய்யா தரீக்காவின் மூத்த இஹ்வானுமான ராஸிக் ஸரூக், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொருளாளர் கலாநிதி மௌலவி அஸ்வர் (அஸ்ஹரி), தரீக்காக்கள் உயர் கவுன்ஸில் செயலாளரும் ஜம்மியதுல் உலமா சபை உறுப்பினருமான முப்தி முஸ்தபா ரஸா, உம்மு ஸவாயா அஜ்வாத் அல்பாஸி அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அஹமத் (மஹ்ழரி), தெவட்டகஹ மஸ்ஜித் தலைவர் அல்ஹாஜ் ரியாஸ் ஸாலி உட்பட உலமாக்கள், பிரமுகர்கள், இராஜதந்திரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 425 ஏக்கர் சிறுபோக நெற்செய்கையில் நட்டம்; ஒரு ஏக்கருக்கு 18மூடைகளே விளைச்சல்

## பசளை கிடைக்காமையே காரணமென தம்பலகாமம் விவசாயிகள் கவலை





(கிண்ணியா நிருபர்)

திருகோணாமலை, தம்பலகாமம் பட்டிமேடு, பிச்சைவெளி விவசாய கண்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், சிறுபோக வேளாண்மை அறுவடை செய்துவருகின்றனர்.

பிச்சைவெளி விவசாய கண்டத்தில் சுமார் 425 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் வேளாண்மை பயிர்ச்செய்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த போகங்களில் ஒரு ஏக்கருக்கு 40-50 மூடைகள் விளைச்சல் கிடைத்தது என்றும் இச்சிறுபோகத்தில் ஒரு ஏக்கருக்கு 15-18 மூடைகளே கிடைக்கின்றன எனவும் விவசாயிகள் கூறுகின்றன.

இச்சிறுபோகத்தில் போதியளவு விளைச்சல் கிடைக்கவில்லை. காரணம், கிருமிநாசினி பசளை கிடைக்காமை, உரிய நேரத்துக்கு பசளை, கிருமிநாசினிகள் விசிறப்படாமை என தெரிவிக்கின்றனர்.

டீசல் குறைவு அதனைப் பெற்றுக்கொள்வதில் மிகவும் கஷ்டம். வேளாண்மை அறுவடைக் கூலியும் அதிகம். 20,000 ரூபா எடுக்கிறார்கள். இம்முறை பாரிய நட்டம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சிறுபோகத்தில் வேளாண்மை செய்தவர்கள், பணம் உள்ளவர்கள் சிலர் 40 ஆயிரம் ரூபா கொடுத்து யூரியா பசளை விசிறினர். அடுத்த போகத்திலாவது எமது வேளாண்மைச் செய்கைக்குத் தேவையான பசளை, கிருமிநாசினிகளை உரியநேரத்துக்கு தந்துதவுமாறு வேண்டிக்கொள்கின்றனர்.

# பப்புவா நியூகினியில் திருடிய வலம்புரி சங்குடன் அம்பாறையில் ஒருவர் கைது



பப்புவா நியூகினியா நாட்டிலிருந்து திருடப்பட்டு இலங்கைக்கு நூதனமாக கொண்டு வரப்பட்ட நிலையில் ஒரு கோடி ரூபாவிற்கு விற்பனைசெய்ய தயாராக இருந்த வலம்புரி சங்குடன் அம்பாறையில் நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் அம்பாறை முகாம் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன குமாரவிற்கு நேற்று முன்தினம் (12) கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டது.

வலம்புரி சங்கை விற்பனை செய்ய முயற்சித்த நபருடன் தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு அம்பாறைக்கு அழைத்து வந்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவராவார்.

வலம்புரி குறித்து நபரிடம் விசாரணை நடத்தியதில், இந்த வலம்புரி, அவர் பணியாற்றிய பப்புவா நியூகினியில் உள்ள பழங்கால பொருட்கள் விற்பனை செய்யும் கடையிலிருந்து திருடப்பட்டு, விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# கல்முனை பிரதேச கலாசார அதிகாரசபை தெரிவு





(பெரியநீலாவணை, கல்முனை நிருபர்கள்)

கல்முனை பிரதேச கலாசார அதிகாரசபையை தெரிவுசெய்வதற்கான ஒன்றுகூடல் பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கிபானா ஜிப்ரியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான், கலாசார அதிகாரசபையின் முன்னாள் செயலாளர் எஸ்.எல்.அஸீஸ் உட்பட பிரதேச துறைசார்ந்த கலைஞர்கள் பலர் இதில் கலந்துகொண்டு புதிய நிர்வாக சபையை தெரிவுசெய்தனர்.

கல்முனை பிரதேச கலாசார அதிகாரசபையின் புதிய தலைவராக எழுத்தாளரும் ஆய்வாளருமான ஏ.எம்.பறக்கத்துல்லா தெரிவுசெய்யப்பட்டதுடன், செயலாளராக மருதமுனையைச் சேர்ந்த கவிஞர் விஜிலி எம்.மூஸா தெரிவுசெய்யப்பட்டார். பொருளாளராக எம்.அஸ்மி தெரிவுசெய்யப்பட்டதுடன், கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங்களிலிருந்து துறைசார்ந்த கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது கல்முனை ஸாக்கிர் ஹூசைன் இயக்கி நடித்த விழிப்புணர்வு குறுந் திரைப்படமும் ஒளிபரப்பப்பட்டதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவிலில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 400 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க இயற்கை பசளை

## கிழக்கு மாகாண முதலமைச்சில் வழங்கிவைப்பு



அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை பசளை (Organic) இலவசமாக வழங்கும் நிகழ்வு நேற்று (13) கிழக்கு மாகாண முதலமைச்சில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டு முதலமைச்சில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் முதலமைச்சின் கணக்காளர் எம்.ஐ.எம்.முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இயற்கை பசளை (Organic) வழங்கினர்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையிட்டு கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்புப் புத்தகத்தில் எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி. தனது இரங்கலைப் பதிவுசெய்தார். (படம் - திகாமடுல்ல நிருபர்)

# படிக்காத வருடத்துக்கும் பணம் கட்ட வேண்டும்; யாழ். பல்கலையில் வெளிவாரி அலகு அடாவடி!




யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பிரிவினால் நடத்தப்படும் வணிகமாணி கற்கைநெறியில் நான்காம் வருட சிறப்புக் கற்கையைத் தொடராமல் வணிகமாணி பொதுத் தகைமையுடன் வெளியேறும் மாணவர்கள் நான்காம் வருடத்துக்கான கட்டணத்தையும் கட்டினால் மட்டுமே பட்டச்சான்றிதழ் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறித்து மாணவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து உடனடியாகத்தலையிட்டு தமக்குத் தீர்வொன்றைத் தருமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கோரிக்கையும் விடுக்கப் பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகினால் நடத்தப்படும் வணிகமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது வருடமொன்றுக்கான கற்கைக் கட்டணமாக ரூபா 39,000 அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி கல்வி கற்கும் மாணவர்கள் ஒவ்வொரு கல்வி ஆண்டின் ஆரம்பத்திலும் அவ்வாண்டுக்குரிய கட்டணத்தைச் செலுத்தி கல்வியைத் தொடர முடியும். அதேநேரம் கற்றல் காலத்தில் மூன்றாவது வருடத்தைப் பூர்த்திசெய்யும் மாணவர்கள் வணிகமாணி பொதுத் தகைமையுடன் தங்கள் கற்கைநெறியை நிறைவுசெய்ய முடியும். நான்காம் வருடத்தைத் தொடரும் மாணவர்கள் வணிகமாணி சிறப்புப் பட்டத்தைப் பெறமுடியும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சிறப்புப் பட்டத்துக்கான கல்வியைத் தொடர முடியாத பலர் வணிகமாணி பொதுத் தகைமையுடன் தமது கல்வியை நிறுத்திக்கொண்டுள்ளனர். இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவதற்கும் அவர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

இந்நிலையில், நான்காம் வருடக் கல்வியைத் தொடராமல், நிதி நிலைமை காரணமாக மூன்றாம் வருடத்துடன் கல்வியை நிறுத்திக்கொண்டவர்கள் கூட, நான்காம் வருடத்துக்குரிய கட்டணமாக ரூபா 39,000 செலுத்தினால் மட்டுமே பட்ட உறுதிப்படுத்தல் கூற்று, விவரணப் பெறுபேற்றுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும், கட்டத் தவறுபவர்களுக்கு அவை வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமையானது அப்பட்டமான உரிமை மீறலாகும் எனவும், கற்காத ஆண்டுக்கும் பணத்தைச் செலுத்த வேண்டுமாயின் தாங்களும் நான்காம் வருடத்தைப் பயின்று சிறப்புப் பட்டத்துடன் வெளியேறியிருக்க முடியும் எனவும் மாணவர்கள் விசனத்துடன் தெரிவித்துள்ளனர்.

# யாழில் பெண்களின் கைப்பையுடன் நடமாடிய இளைஞன் கைது

## நகைகளும் போதைப்பொருளும் மீட்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு அருகில் பெண்கள் பாவிக்கும் கைப்பையுடன் நடமாடியவரிடமிருந்து சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் (12) மாலை பெண்கள் பாவிக்கும் கைப்பையுடன் (ஹேண்ட்பேக்) சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞன் ஒருவன் நடமாடியுள்ளான்.

அது தொடர்பில் தகவல் அறிந்த யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்திற்குச் சென்று சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்து, அவரது உடமைகளை சோதனையிட்டனர்.

அதன் போது குறித்த இளைஞன் 24 வயதுடைய குருநகர் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், இளைஞன் வைத்திருந்த பெண்களின் கைப்பையினுள் சுமார் 08 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகை என்பன காணப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞனை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 6 இந்திய மீனவர்கள் விடுதலை

(மன்னார் நகர் நிருபர்)

தலைமன்னார் கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லைக்கோடு ஊடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், கடந்த மாதம் 27ஆம் திகதி 06 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். குறித்த மீனவர்கள் நேற்று முன்தினம் (12) மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேரும் 28ஆம் திகதி காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதனை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் நேற்று முன்தினம்வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான், குறித்த மீனவர்கள் 6 பேரையும் 3 வருட சிறைத்தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு விடுதலை செய்தார்.

மேலும் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி படகு உரிமையாளர்களுக்கான வழக்கு விசாரணை இடம்பெறும். அன்றைய தினம் படகு உரிமையாளர் மன்றில் சமுகமளிக்காவிட்டால் படகு அரசுடைமையாக்கப்படும் என நீதவான் தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களை இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் ஊடாக மிகிரியாகம முகாமிற்கு அனுப்பி நாட்டிற்கு அனுப்ப உத்தரவிட்டார்.

இந்நிலையில் மீனவர்கள் இந்திய உயர்ஸ்தானிகர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# பகிடிவதை குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பல்கலை மாணவருக்கு விளக்கமறியல்

ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவனை பகிடிவதைக்கு உட்படுத்தி தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழக முதலாம் வருட மாணவனை அதே பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்கள் கொக்குவில் பகுதிக்கு அழைத்து பகிடிவதைக்கு உள்ளாக்கி, தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ,இரண்டாம் வருட மாணவனை பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை மாணவனை விளக்கமறியலில் தடுத்துவைக்கு மாறு மன்று உத்தரவிட்டது.

# பூட்டியிருந்த வீட்டைத் திறந்து தங்க நகைகள் கொள்ளை

## வல்வெட்டித்துறையில் சம்பவம்

(யாழ். நிருபர்)

வல்வெட்டித்துறையில் பூட்டியிருந்த வீட்டைத் திறந்து சுமார் 16 பவுண் தங்க நகைகள் திருடிவிட்டு மீளவும் வீட்டின் கதவை பூட்டிவிட்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

வல்வெட்டி என்ற இடத்தில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வீட்டிலிருந்தவர்கள் வீட்டுக்கு அண்மையிலுள்ள ஓர் இடத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிய போதே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.இதன்போது, 11 பவுண் தாலிக்கொடி, 5 பவுண் காப்பு மற்றும் 19 ஆயிரம் ரூபா பணம் என்பனவே திருட்டுப்போயுள்ளன என வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதிலால் வீட்டு வளாகத்துக்குள் நுழைந்த திருடர்கள் முன் கதவைத் திறந்து நகைகளைத் திருடிவிட்டு மீளவும் முன் கதவை மூடிவிட்டுச் சென்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நூல் அறிமுகமும் வெளியீடும்

நூலியலாளர் செல்வராஜாவின் 'நூல்தேட்டம் 16', 'நூலகவியல் - பெருந்தொகுப்பு', 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்' ஆகிய புத்தகங்களின் அறிமுகமும் வெளியீடும் எதிர் வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தர்ஷனின் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன் கிண்ணியாவில் ஒருவர் கைது

(திருகோணமலை, சீனக்குடா, கிண்ணியா நிருபர்கள்)

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல நாட்களாக ஐஸ் போதைப்பொருள் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த சந்தேக நபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக நேற்று முன்தினம் (12) குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கிண்ணியா தாயிப் நகர், நடுவூற்று சுனாமி வீட்டுத் திட்டத்தில் வசித்துவரும் 37 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிட மிருந்து 07 கிராம் 410 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் குறித்த நபர் தொடர்பில் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் விசாரணையின் பின்னர் திருவண்ணாமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனை கடற்கரை பள்ளிவாசலை அண்டிய பகுதிகளில் சேரும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு



(நிந்தவூர் நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பள்ளிவாசலை அண்டிய பிரதேசத்தில் நாளுக்குநாள் சேரும் குப்பைகளின் அளவு அதிகரித்துவருவதனால் கடற்கரை பள்ளிவாசலுக்கு வருவோரும், வீதியால் பயணிப்போரும், பிரதேச குடியிருப்பாளர்களும் பல்வேறு விதமான சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

கடற்கரை வீதியினால் இரவில் பயணிக்கும் சிலர் வீட்டுக்கழிவுகளையும் மிருகக்கழிவுகளையும் கடற்கரை வீதியின் இருமருங்கிலும் கடற்கரை ஓரத்திலும் வீசிவிட்டு செல்கின்றனர்.

இந்தக் குப்பைகளை பகல்வேளையில் கட்டாக்காலி மாடுகள், நாய்கள் மற்றும் காகங்கள் கிளறி பல இடங்களுக்கும் பரப்புவதனால் பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் சூழல் மாசடைவதுடன், சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட்டுவருகின்றன.

எனவே, இந்த விடயத்தை கவனத்திற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

## போடியார் புலம்பல்!



**திருகோணமல கோணேஸ்வரர் பிரதேசத்த புனித பிரதேசமாக மாற்றோணும் எண்டு வீணக் கட்சி அமைச்சர் டக்லஸ் சொல்லியிருக்காரு, நல்ல விசயம்தான்.**

**அதுக்கு முந்தி திருகோணமல மாவட்டத்தில நடக்கிற திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தையும் ஒள்ளுப்பம் தடுக்கோணும் அமைச்சரே.**

**இப்ப அங்க சம்பந்தரும் இல்ல, தமிழ் எம்.பியும் இல்ல எலுவா? சம்பந்தர விலக்கி கனடா குகதாசனுக்காவது எம்.பி. வேலய குடுக்க தமிழரசு ஆக்களும் இல்ல.**

## அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்க அபிவிருத்திப் பணிகளை பணிப்பாளர் சபை ஆராய்வு







(திகாமடுல்ல நிருபர்)

அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் எவ்வித முன்னேற்றகரமான செயற்பாடு களுமின்றி பல வருடங்கள் இயங்கிவந்துள்ளது. இங்கு ஏற்பட்ட ஊழல், மோசடிகள் மற்றும் முறையற்ற நிர்வாகத்திறன் என்பனவற்றை மையப்படுத்தி கிழக்கு மாகாண ஆளுநர், கூட்டுறவு ஆணையாளர் ஆகியோருக்கு பலரும் முறைப்பாடு செய்திருந்தனர். இதனால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, விசாரணை நடைபெறுகின்றபோதிலும் தற்காலிக பணிப்பாளர் சபையை ஆளுநரின் ஆலோசனைக்கமைய ஆணையாளர் நியமிப்புச் செய்து இயங்கு நிலைக்குக் கொண்டுவர ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில் சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னர் அட்டாளைச்சேனை கடற்கரையை அண்டி மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை செயலிழந்து காணப்படுகின்றது. இதனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக இயங்குநிலைக்குக் கொண்டுவந்து இந்தப் பகுதியிலுள்ள 200இற்கும் மேற்பட்ட மீனவ இயந்திரப்படகுத் தொழிலாளர்கள் நன்மையடையும் வகையில் மாற்றியமைக்கு முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடியை அபிவிருத்திசெய்து கவர்ச்சிகரமான தொரு விற்பனை நிலையமாக மாற்றியமைப்பது தொடர்பான கள விஜயம் பணிப்பாளர் சபைத் தலைவரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.கே.எம்.அஷ்ரப் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான றிசாத் ஏ. காதர், பொது முகாமையாளர் எஸ்.எல்.அல்-முனவ்வர், பல்நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளர் எஸ்.எம்.எம்.ஜெமீல் ஆகியோருடன் நலன் விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த செயற்றிட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், பூரண ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் கூட்டுறவுத்துறைக்கான மாகாண ஆணையாளர் எந்திரி. என்.சிவலிங்கம் ஆலோசனை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் திருமலை பொதுச் சந்தை வியாபாரிகள் பாதிப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், மரக்கறிகளின் விலைகளும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் திருகோணமலை பொதுச் சந்தையில் மக்களின் வருகை குறைவாகக் காணப்படுவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், திருகோணமலை பொதுச்சந்தை கட்டடத் தொகுதியில் ஒரு கிலோ நுவரெலியா கெரட் 480 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன், மலேசியா போஞ்சி ஒரு கிலோ 800 ரூபாவுக்கும் வெலிமட போஞ்சி 680 ரூபாவுக்கும் விற்கப்பட்டு வருகின்றது.

கல் கோவா 520 ரூபாவுக்கும், கோவா 480 ரூபாவுக்கும், லீக்ஸ் 360 ரூபாவுக்கும் தக்காளி 360 ரூபாவுக்கும், எம்.ஜ. பச்சை மிளகாய் 400 ரூபாவுக்கும், மிளகாய் 320 ரூபாவுக்கும், கறி மிளகாய் 800 ரூபாவுக்கும், கத்தரி 300 ரூபாவுக்கும், கிழங்கு 320 ரூபாவுக்கும், தேசிக்காய் 400 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பினால் தாம் மிகவும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருவதாகவும் இன்னும் கடனாளியாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே, அரசாங்கம் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மரக்கறி விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்து கைதான 85 பேரில் 12 சிறுவர்கள் விடுதலை

### 12 பெண்களுக்கு சரீரப் பிணை – ஏனையோருக்கு விளக்கமறியல்

(அப்துல்சலாம் யாசீம்)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்து கிழக்கு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 85 பேரில் 12 பெண்களை ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறும் 12 சிறார்களை விடுவிக்குமாறும் திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் றஸ்ஸாக் முன்னிலையில் நேற்று முன்தினம் (12) குறித்த சந்தேக நபர்களை ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்பரப்பில் மட்டக்களப்பு பகுதியில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சென்ற 85 பேரை கடற்படையினர் கைதுசெய்து திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில், குறித்த சந்தேக நபர்களை ஆஜர்படுத்தியபோது பெண்களை ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறும் 12 சிறுவர்களையும் வழக்கிலிருந்து விடுவிக்குமாறும் 61 பேரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் றஸ்ஸாக் கட்டளையிட்டார்.

## வாழைச்சேனை ஆயிஷா மாணவர்களுக்கு இரண்டாவது கொவிட் தடுப்பூசி ஏற்றல்



(மீராவோடை நிருபர்)

இரண்டாவது கொவிட் தடுப்பூசியை செலுத்தத் தவறிய பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளுக்கு நேற்று (13) தடுப்பூசி செலுத்தப்பட்டது.

வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கானின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.நௌபர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதல்களுடன் தடுப்பூசி செலுத்தப்பட்டது.



## ‘தற்கொலையை தவிர்ப்போம்’ மனவெழுச்சி பயிற்சிப்பட்டறை





(மாளிகைக்காடு நிருபர்)

''தற்கொலையை தவிர்ப்போம்'' எனும் தொனிப்பொருளின்கீழ் மனவெழுச்சி பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் (12) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் ஆரம்ப உரையை நிகழ்த்தியதுடன், ''தற்கொலையை தவிர்ப்போம்'' எனும் தொனிப்பொருளின்கீழ் மனவெழுச்சி பயிற்சிப்பட்டறையின் விரிவுரையை உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல் நடத்தினார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வை உளநலப் பிரிவு ஏற்பாடுசெய்ததுடன், பணிப்பாளரின் வழிகாட்டலில் இவ்வாறான நிகழ்வுகள் உளநலப் பிரிவினால் சமூக மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. ஆசிரியர் கலாசாலை அதிபருக்குப் பிரியாவிடை





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.சி.ஜுனைட் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப பீடாதிபதியாக இடமாற்றம் பெற்றுச்செல்வதை முன்னிட்டு அவருக்கு கலாசாலையில் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (12) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் உப அதிபர் கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா, பிரதி அதிபர் சி.மொறின் உட்பட விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள், ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வித்துறை, சமூக விஞ்ஞானத்துறை, முதல்மொழி, ஆங்கிலத்துறை, விஞ்ஞானத்துறை உள்ளிட்ட அனைத்து ஆசிரிய மாணவர்களும் கலந்துகொண்டு மாற்றலாகிச் செல்லும் அதிபர் ஜுனைட்டை வாழ்த்தி பாராட்டிப் பேசினர்.

இந்நிகழ்வில் இடமாற்றலாகிச் செல்லும் கலாசாலை அதிபருக்கு பொன்னாடை போர்த்தி, பூச்சரங்கள் அணிவித்து, பாமாலை புனைந்து, நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# ஏழு வருட விமர்சனங்களை புரட்டிப்போட்ட ஆசியக்கிண்ணம் - 2022

றிழ்ஹான் வாஹிட்

பல காலங்களாக பல கிண்ணங்களை இலகுவாக வென்றுவிடக்கூடியவாறே இலங்கை அணியின் கட்டமைப்பு காணப்பட்டது. அதற்கு காரணம், அர்ஜுன எனும் மகத்தான தலைவன் இட்ட அடித்தளமே. அதன்பின் அவர் பாசறையில் பயிற்றுவிக்கப்பட்டோர் அதனை மேலும் உறுதிப்படுத்தினர். 2014 காலம்வரை 2 உலகக் கிண்ணங்கள், 5 ஆசியக் கிண்ணங்கள் கைவசம் இருந்தன அணியிடம். அதிலும் அதிக தடவைகள் இறுதிப்போட்டிற்கு சென்றிருக்கின்றன.

இதன் காரணமாகவே அன்றிலிருந்து இன்றுவரை அர்ஜுன, சனத், அரவிந்த, வாஸ், முரளி, டில்சான், சங்கா, மஹேல, மாலிங்க ஆகியோர் சுப்பர் ஸ்டார்களாக மதிக்கப்படுகின்றார்கள். 2015-2022 வரை இலங்கை அணி பாரிய வீழ்ச்சி ஒன்றை சந்திக்க நேர்ந்தது. விமர்சனங்கள் பழகிப் போகின. நக்கல்களும், நையாண்டிகளும் புடை சூழ்ந்தன. ஆம். இலங்கை அணியிடம் முறையான திட்டங்களோ, வியூகங்களோ, அடுத்த இடங்களை நிரப்புவதற்கு வீரர்களோ இல்லை.

சிறந்த கட்டமைப்பைக்கொண்டு அணி ஒன்றை ஒன்றித்து செயற்படத் தவறியிருந்தது இலங்கை அணி. அணித்தலைவர்களின் மாற்றம், அதிகமான வீரர்களின் வருகை, அனுபவ வீரர்களின் உபாதை போன்றவை பாரிய பங்களிப்பு செய்திருந்தன. இதன் காரணமாக 2017இல் சிம்பாப்வே தொடர் தோல்வி, 2018இல் ஆசியக் கிண்ணம் சுப்பர் 4இற்கு தகுதி இழந்தது இலங்கை அணி. தோல்விகள் பழகி வெற்றிகள் எட்டாக்கனியாகின.

2019 ஒருநாள் உலகக்கிண்ணத்தின் பின் புதிய பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆதரின் வருகையின் பின்னர் இலங்கை அணியை ஒரு கட்டுக்கோப்புக்குள் வகைப்படுத்தினார். இளம் வீரர்களை அடையாளப் படுத்தி அடுத்தகட்ட நகர்வுகளுக்குத் தயார்ப்படுத் தினார். உடற்தகுதியை மையப்படுத்தியே இவரது தெரிவுகளும் காணப்பட்டன. அனுபவ வீரர்களை வெளியில் வைத்து இளம் அணியை உருவாக்குவதை செயற்பட ஆரம்பித்தார். முதலில் இது விமர்சனத்திற்குட்படுத்தப்பட்டாலும் இன்று நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது மிக்கியின் வியூகம்.







2021இல் ஷானகவிற்கு அணித்தலைவர் என்ற அந்தஸ்தை உருவாக்கியது இலங்கை அணி. பழைய இலங்கை அணிபோல் போராட்டம் வழங்கக் கூடிய வகையில் எதிரணிக்கு அழுத்தம் கொடுத்திருந்த னர். ஷானக தான் சிறந்த தலைவர் என்று ஒவ்வொரு போட்டியிலும் தன்னை செதுக்கிக் கொண்டிருந்தார். கள வியூகம், ஆடுகளத்தின் தன்மைக்கேற்றவாறு பந்துவீச்சாளர்களை தெரிவுசெய்தல், பந்துவீச்சு சுழற்சி முறையை நேர்த்தி யாக செய்தல் போன்ற வற்றை சிறப்பாகவே வழிநடத்தியிருந்தார்.

2021 உலகக்கிண் ணத்திலும் இலங்கை அணி போராட் டத்துடனேயே காணப் பட்டது. அடுத்த உலகக்கிண்ணத்தில் இலங்கை மீதான பார்வை தற்போது எழுந்துள்ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி போன்ற நெருக்கடிகள் உள்ளன. அவற்றையெல்லாம் தடை தாண்டியே இன்று வான் உயிர்ந்துள்ளது இலங்கை கிரிக்கெட் அணி.




2022 ஆசியக் கிண்ணத்தின் முதல் போட்டி யில் ஆப்கானிஸ்தானுடன் படுமோசமாக தோல்வியுற்று விமர்சனத்திற்குட்படுத்தப் பட்டிருந்தது இலங்கை அணி. ஷானகவும், சில்வர்வுடும் (இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர்) இனி நாங்கள் பொசிட்டிவ் கிரிக்கெட்டை ஆட இருக்கிறோம் என்று கூறினர். அவ்வாறே ஆரம்பித்தது இலங்கை அணியின் ஒவ்வொரு போட்டியும். ஒவ்வொரு வீரரும் தங்கள் ஓட்டங்களை 30இற்கும் அதிகமாக சிறந்த ஸ்ட்ரைக் ரேட்டிற்கு விளையாடி வந்தனர்.




ஷானக இலங்கை அணியின் துருப்புச்சீட்டாகவே காணப்பட்டார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஷானக விளையாடிய ஆட்டம் அனை வரையும் மெச்சி எல்லோரின் ஆழ்மனதிற்குள்ளும் குடி புகுந்தார். பானுக, ஹசரங்கவின் அதிக ரி20 போட்டிகள் விளையாடிய அனுபவம் மேலும் வலுச் சேர்த்தது. பானுக இந்த ஆசியக் கிண்ணத்தின் முடி சூடா கதாநாயகன். ஒவ்வொரு போட்டியிலும் தன்னை யார் என்று நிரூபித்தார். பெத்தும் நிசங்க தன்னிடம் போதியளவு பவர் இல்லை என்றாலும், தன்னை உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரராக நிரூபித்திருக்கிறார்.

மஹேஷ் தீக்ஷனவின் பந்தும், சாமிகவின் பந்தும் இலங்கை அணிக்கு மேலும் பலம் சேர்த் தது. இதன் விளைவாகவே பாகிஸ் தானுக்கு எதிரான இறுதிப் போட்டி யில் வெற்றியீட்டி ஆசியக் கிண் ணத்தை சுவீகரித்துள்ளது.

171 ஓட்டங்களை இலகுவாக துரத்தியடிக்கும் என்ற பார்வையை, கட்டுக்கோப்பான பந்துவீச்சு மூலம் அணியை கட்டுப்படுத்தி இலகுவாக வீழ்த்த முடியும் என்றும் நிரூபித்துள்ளது. இந்த ஆசியக் கிண்ணத்தில் ஒவ்வொரு வீரரின் பெயரும் பொறிக்கப்படுமளவுக்கே விளையாட்டு இருந்தது. அடுத்த இலக்கு இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் வெல்வதே. அதற்கான தயார்ப் படுத்தலில் மும்முரமாகவே உள்ளனர்.

இந்த ஆசியக் கிண்ணம் தகுதியுடையவர் களின் கைகளுக்கே சென்றுள்ளது. அடுத்து இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தையும் பெற்று மீண்டும் நம் கைகள் ஓங்க தசுன் ஷானக தலைமையிலான படைக்கு வாழ்த்துகள்.







இலங்கைக்கு வருகை தந்த எமது ஆசிய ராஜாக்கள் மற்றும் இராணிகள் பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து திறந்த வாகன அணிவகுப்பில் அவர்களின் பிரதான விளையாட்டுத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, நாட்டின் விளையாட்டு ஆர்வலர்கள் ஒன்றுகூடி அவர்களுக்கு மிகுந்த வரவேற்பளித்தனர். விளையாட்டு அமைச்சு, ஸ்ரீலங்கா கிரிக்கட், இலங்கை வலைப்பந்து சம்மேளனம் மற்றும் தேசிய கிரிக்கெட், வலைப்பந்து அணிகளின் உத்தியோகபூர்வ அனுசரணையாளரும், இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனருமான டயலொக் ஆசிஆட்டா ஆகியவை இணைந்து இந்த விசேட வரவேற்பை ஏற்பாடு செய்திருந்தன. அந்த சிறப்பு நிகழ்வின் சில புகைப்படங்கள்.












Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7